
தொகுதி 6.] 1927ஆ செப்டம்பர் 1௳ [பகுதி 8.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...ளிசாமி முதலியார்,
...ந்த நிலயம், சென்னை.

JL
MM211, N22MM
M 27.6.8.
186578

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கெ ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானி குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆன போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இத 1922ஆம் பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறே இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடி பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவ களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர் ளால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல் வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஆம் ஜனவரிமீத் திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற எப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கி றது. இப்போது கடற் கொள்ளைக்காரன் என்றநாவல் ஆரம்பமாகி நடந்து வருகிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோ புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் ச கைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சே சந்தாதாரர்களுக்கு 1927ஆம் ஜனவரிமீத்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத்தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ் சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ஆம் ஜனவரிமீ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யி[illegible] முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சி கைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தா லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக் கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| அர்ஜுன ஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
11 NOV 193
MADRAS

உ

# கடற்கொள்ளைக்காரன்

## (இரண்டாம் பாகம்.)

### 38-வது அத்தியாயம்.

சுந்தரம்மாள் என்ற மூதாட்டி தன் எஜமான் தன் வார்த்தைகளுக் கிணங்கிவிட்டதாலேயே மிக்க சந்தோஷமடைந்தாள். இந்த பேரத்தில் தனக்கும் நல்ல இலாபமுண்டென்று அவள் அறிவாள். எவ்வாறெனின் வீட்டெஜமான் குடும்ப சம்பந்தமாகச் செய்யும் எல்லாப் பேரங்களிலும் வீட்டுக்காரியஸ்திக்கு இலாபமுண்டு. ஆகையால் இப்போது முருகப்பனைத் தேடுவதற்காக அங்குள்ள எல்லாப் படகுகளும் ஆட்களும் அனுப்பப் படுவதாயின் அவர்கள் அதற்காகத் தாராளமான பணம் கேட்பார்கள். அதில் தனக்கு நல்ல பாகம் கிடைக்கும் என்று அவள் நன்கறிவாள். ஆகையால் வீதியின், வழியாகச் செல்லும்போதே படகோட்டுவதில் சம்பந்தப்பட்ட ஆட்களின் பெயர்களை யெல்லாம் கூறி "சின்னு, சொக்கா, கறியா, குள்ளா!" என்று கூவிக்கொண்டே துரிதமாகச் சென்றாள்.

சுந்தரம்மாளுக்கு முருகப்பன்மேல் உண்மையாகவே விசுவாசமுண்டு. மேலும் தாயற்ற பிள்ளைமேல் மாதர்களுக்கு எப்போதும் இரக்கமுண்டாவதியற்கை. அதோடு

186519

முருகப்பன் சென்று ஒருவாரத்திற்குமேல் வராமலிருப்பதாலும், அவனைப்பற்றி யொருசங்கதியும் வராமலிருப்பதாலும் அம்மூதாட்டிக்கு உள்ளத்தில் வியாகூலமே. அப்படி யிருந்தாலும் இச்சமயத்தில்—அவனைப் பற்றித் தேடுவதற்காகப் பெரிய ஏற்பாடு செய்யப்படும் சமயத்தில்—அந்த ஏற்பாட்டால் தனக்கு நல்ல இலாபம் கிடைக்கும் என்று நிச்சயமாகத் தெரியும் சமயத்தில்—முருகப்பன் திடீலென்று வந்து சேர்ந்துவிட்டாலோ சுந்தரம்மாளுக்குச் சந்தோஷமுண்டாவதற்குப் பதிலாக அவன்மேல் வெறுப்பும் கோபமுமே யுண்டாகும். ஏனெனில் பண ஆசை யப்படிப்பட்டதாக விருக்கிறது. பண ஆசையால் மனிதர் பொய்கூறுவார்கள், சூது செய்வார்கள், வஞ்சனை செய்வார்கள், சத்தியம் தவறுவார்கள், களவுசெய்வார்கள், துரோகம் செய்வார்கள், ஏன்! முடிவாய்க் கொலையே செய்வார்கள். ஏறக்குறைய மூவாசைகளும் அத்தகையவையே. அதனாற்றான் மண், பெண், பொன் இந்த மூவாசைகளையும் விட்டவர்களுக்கே ஆண்டவனருள் கிட்டுமென்று சுருதியும் ஆன்றோரும் கூறினர். அதனாலேயே "மூவாசை யென்று முடிந்திடுமோ" என்று அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளினர். ஆடவரே இப்பேயின் வயப்பட்டு அல்லற்படுவது சாதாரணமாயின் ஒருபெண்பால் அதனால் மயங்குவது வியப்போ?

சுந்தரம்மாள் துரிதமாய்ச் சென்று நகரமுதலாளியாகிய அதிகாரியைக்கண்டு வேண்டிய படகுகளுக்கும் ஆட்களுக்கும் ஏற்பாடு செய்துகொண்டதோடு வழக்கப்படி அதில் தனக்குச் சேரவேண்டிய பாகம் இவ்வளவு என்பதைப்பற்றி அதிகாரியிடம் திட்டமாய் ஏற்பாடு செய்துகொண்டாள். அதன் பிறகு அவள் அவ்விஷயத்தைப் பற்றித் தன் எஜமானிடம் எப்படிப் பேசவேண்டுமென்

பதைக்குறித்து அந்த அதிகாரிக்கு வழியில் உபதேசம் செய்து கொண்டே யவனை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தாள். அச்சமயம் அவள் மனதில் சந்தோஷம் பொங்கியது. வழியில் சுந்தரம்மாள் கிராமாதிகாரியிடம் தன் எஜமானுடைய சுபாவத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே வருபவள் "நீ யவனிடம் பேசும்போது எதையும் இரண்டு முறை கூறும்படி வைத்துக் கொள்ளாதே. எதையும் தைரியமாகவும் கெட்டியாகவும் கூறு. ஒரு சங்கதியைப்பற்றிமறுபடி யவனைக் கேட்கும்படி செய்தால் அவனுக்குக் கோபம் வரும். ஆகையால் எதையும் தெளிவாய் விளங்குமாறு உரக்கக்கூறு. இனி யின்னொரு விஷயம். இதை நன்ருகக் கவனத்தில் வைத்துக்கொள். தான் வசிக்கும் பூமி எவ்வளவு அகல நீளமுடைய தென்பது அவனுக்குத் தெரியாது. ஆகையால் அவன் ஒரு இடத்திலிருந்து ஒரு இடம் எவ்வளவு தூரம் என்று கேட்டால் ஒருமைலிருந்தால் மூன்று மைல் என்று தாராளமாய்க் கூறலாம். துட்டு விஷயத்திலோ முக்கால் ரூபாய் கேட்கவேண்டியதற்கு மூன்று ரூபாய் என்று கேட்கலாம். பணம் அவனுக்குக் கிளிஞ்சில் ஓடுமாதிரியே. நான் கூறிய யாவும் நன்ருக நினைப்பிலிருக்கட்டும்" என்று இவ்வாறு நன்ருய் உபதேசம் செய்தாள்.

சுந்தரம்மாள் கூறிய உபதேசங்களைக் கேட்ட கிராமாதிகாரியாகிய இரங்கநாதம் பிள்ளை மிக்க சந்தோஷமடைந்தான். அந்த உபதேசத்தை மனதில் வைத்துக்கொண்டே வீட்டிற்கு வந்து அவ்வதிகாரி மார்க்கசேனனைக் கண்டதும் அவன் மாதிரியை நோக்கிச் சற்று சிந்தித்தான். உடனே அவன் மனம் கலங்கிவிட்டது. மோசம் செய்யலாம் என்ற எண்ணம் அவன் மனதினின்று பறந்து விட்டது. இம்மனிதனிடம் எப்படி நாம் பொய்கூறுவது என்று பீதியடைந்து விட்டான். ஆயி

னும் அவன் ஆரம்பத்தில் கூலியை யதிகமாகக் கேட்பதற்காக, ஜலத்திலும் கரையிலும் செல்லவேண்டிய கஷ்டங்களையும், அதிலும் கடல்வழி செல்லும்போது நீரோட்டத்தாலும், நீர்ச்சுழிகளாலும் படகுகளுக்கே ஆபத்து நேரிடுமென்பதையும் அதிகமாய்க் கூறியதோடு தூரங்களையும் அதிகமாகக் கூறமுயன்ருன். அவ்வாறுகூறி, மார்க்கசேனன் அளித்த விடையைக்கேட்டதே அவன் பேரிடிவிழுந்தவன் போலாய் விட்டதோடு "அடடா! நாம் சுத்த மூடத்தனமாய் இந்த முட்டாள் கிழவியின் பேச்சை நம்பிக்கொண்டு இவனிடம் இப்படிப் பேசியது நமக்கே இழிவு" என்று எண்ணிக்கொண்டான்.

ஏனெனில் மார்க்கசேனன் பேசியமாதிரியால் அவனுக்கு எல்லாப் பிரதேசங்களைப் பற்றியும் நன்ருய்த் தெரியும் என்றும் ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்குச் செல்லும் தூரம் மட்டுமல்ல, கடல்வழியும் கடலில் ஆங்காங்குள்ள நீரோட்டங்களும், படகுகள் செல்லக்கூடிய மார்க்கங்களும் யாவும் பூரணமாகவே அவன் அறிந்திருக்கிருன் என்பது நன்ருகப் புலப்பட்டது. இதுகாறும் இவ்விஷயங்கள் அவனுக்குத் தெரியும் என்று ஒருவருமறியார்கள். ஆகையால் கிராமாதிகாரி முருகப்பனைத் தேடுவதற்காக என்ன செலவாகும் என்பதைக் கூறும்போதும் என்ன கேட்பதென்று கலக்கமடைந்து விட்டான். ஏனெனில் இந்த விஷயத்திலும் அவனுக்குப் போதுமான ஞானமிருக்குமென்றே இரங்கநாதம்பிள்ளைக்குப் புலப்பட்டது. அதோடு மார்க்கசேனன் ஜலபுரத்திற்கு வந்த ஆரம்பத்தில் ஒரு மீன்காரன் அதிக விலை கூறி, வீட்டுக் காரியஸ்தி அவனோடு பங்குக்காகச் சச்சரவிடும்போது கேட்டு அவனையும் இன்னொரு வேலைக்காரனையும் வேலையினின்றும் நீக்கி விட்டது அவனுக்கு நன்ருய் நினைவிலிருந்தது.

அச்சமயம் மார்க்கசேனன் காட்டிய கோபத்தை நினைந்த போது கிராமாதிகாரிக்கு மிக்க அச்சமாகவே இருந்தது.

அவன் அவ்வாறு எவ்வளவு கேட்பதென்று மிக்க கலவரத்திலே யிருக்கையில் மார்க்கசேனன் தன் வார்த்தைகளால் அவனைப் பேசவொட்டாமலே செய்து விட்டான். எப்படியெனில் அவன் தைரியத்தோடு எவ்வளவு கேட்கலாகுமோ அதற்குக் கொஞ்சம் அதிகமான தொகை கொடுப்பதாகவும் தன் புத்திரனைப்பற்றிய க்ஷேமமான சமாசாரம் கொண்டு வந்தால் அதற்கு மேலும் பரிசளிப்பதாகவும் கூறினன்.

இந்த முக்கியமான விஷயம் முடிந்ததும் இரங்கநாதம் பிள்ளை முருகப்பனைப்பற்றி எங்கெங்கு போய்த் தேடலாம் என்பதைப்பற்றிச் சிந்தித்து மார்க்கசேனனை நோக்கி "நான் அவ்வாலிபரைப்பற்றி இத்தீவிலும் அடுத்த தீவுகளிலுமுள்ள பெரிய மனிதர்கள் வீடுகளிலெல்லாம் விசாரிக்கிறேன். இன்னும் எனக்குத் தோன்றுமிடங்களிலெல்லாம் பார்ப்பேன். ஆயினும் தங்களுக்குக் கோபம் வராமலிருப்பதாயின் ஒரு சங்கதி கூற விரும்புகிறேன். அதாவது சமீபத்திலேயே ஒருவர் இருக்கிறார்கள். அவர்கள் முருகப்பனைப்பற்றி வேறு யாரேனும் கூறுவதைவிட அதிகமாகக் கூறுவார்கள்" என்று கூறிவிட்டுச் சுந்தரம்மாளை நோக்கி "நான் யாரைப்பற்றிக் கூறுகிறேன் என்பது உனக்குத் தெரிகிறதல்லவா?" என்று கேட்டான். அவள் ஆம் என்று கண் சிமிட்டித் தலையசைத்தாள்.

அதையறிந்த மார்க்கசேனன் "இதென்ன சங்கதி. உள்ளதைப் பகிரங்கமாய்ப் பேசுங்கள். மனம் விட்டு எதையும் இரண்டொரு வார்த்தைகளில் சுருக்கமாய்க் கூறி விடுங்கள். நீங்கள் யாரைப்பற்றிக் கூறுகிறீர்கள்?" என்றான்.

**சுந்தரம்மாள்:**—"நமது இரங்கநாதம் பிள்ளை கூறுவது

பிச்சிமலை நாகம்மாளைப் பற்றியே. அவள் இன்று தன் சொந்த வேலையாய் இரங்கன் துறைக்குச் சென்றிருக்கிறாள்'' என்றாள்.

**மார்க்கசேனன்:**—இந்த ஆளுக்கு என் மகனைப்பற்றி யென்ன தெரியும்? அவள் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் ஒரு பைத்தியக்காரி யென்றும் மோசக்காரி யென்றும் கருதுகிறேன்.

**சுந்தரம்மாள்:**—அவள் அலைந்துகொண் டிருப்பவளாயினும், அவள் வீட்டில் அவளுக்கு ஏதேனும் குறையிருக்கிறதென்பதற்காகவல்ல அவள் அலைவது. அவளுக்கு வேண்டியயாவும் பூரணமாய்க் குறைவின்றியவள் வீட்டிலிருக்கின்றன.

**மார்க்கசேனன்:**—அதைப்பற்றி என் புத்திரனுக்கு ஆகவேண்டியதென்ன ?

**சுந்தரம்மாள்:**—அது எனக்குத் தெரியாது. அவள் முதலில் நமது முருகப்பனைப் பார்த்தது முதல் அவன்மேல் வரவர மிக்க பிரியம் கொண்டாள். அப்போதைக்கப்போது அவனுக்கு அரிய பொருள்களை யளித்திருக்கிறாள். திருட்டாந்தமாய் அவன் கழுத்திலணிந்திருக்கும் அச்சங்கிலி-அது தெய்வீகமான பொன்னால் செய்யப் பட்டதென்று யாவரும் கூறுகிறார்கள் - அது எத்தகைய பொன்னென்று எனக்குத்தெரியும். ஆனால் ஹாக்கர் சுந்தரம்பிள்ளை அதன் விலை குறைந்தது ஆயிரத்தைந்நூறு ரூபாய் பெறும் என்றும் அது சாதாரண பொன்னல்லவென்றும் கூறுகிறான்'' என்றாள்.

இதைக்கேட்ட மார்க்கசேனன் சற்று சிந்தித்து நகர அதிகாரியை நோக்கி "இரங்கநாதம் பிள்ளை! நீ போய் அல்லது யாரையேனும் அனுப்பி அம்மாதுக்கு என் புத்தி

ரனைப்பற்றி யேதேனும் தெரியுமா என்பதை யறிந்துவா'' என்றான்.

**இரங்கநாதம் பிள்ளை:**—"அம்மாது இத்தீவுகளில் நடக்கும் சங்கதிகளையெல்லாம் மற்றபேர் அறிவதற்கு முன்பே யெப்படியோ அறிந்து கொள்கிறாள். அதுவரையில் உண்மை. ஆனால் அவளைத் தேடிக்கொண்டு இரங்கன் துறைக்காவது, குறுக்குத் துறைக்காவது, வேறு எத்துறைக்காவது போகத் தைரியமுடைய மனிதன் இச்சத்தத்தீவில் எவனுமில்லை யென்றே நான் திட்டமாகக் கூறுவேன். நான் கூறுவது கடவுளறிய உண்மை'' என்றான்.

**மார்க்கசேனன்**—"இவையாவும் முட்டாள் தனமான மூடக்கொள்கைகளன்றி வேறில்லை. ஓ! சுந்தரம்மாள்! என் மேல் உடையை யெடுத்துவா. இம்மாது சமீப காலத்தில் வசந்த மாளிகைக்குச் சென்றிருக்கிறாள். இவள் அந்த தைரியநாதம் பிள்ளையின் சுற்றத்தாள். இவள் அங்கு சென்றிருந்ததால் முருகப்பன் இதுகாறும் வராதிருப்பதன் காரணம் அவளுக்குத் தெரிந்தேயிருக்கும். நானே யவளைத்தேடிப்போய்க் கண்டு பிடிக்கிறேன். அவள் குறுக்குத் துறையிலிருக்கிறாளென்று நீ கூறினையல்லவா? இவ்விஷயத்தை நானே நேரில் சென்று ஆராய்ச்சி செய்கிறேன்'' என்றான்.

**சுந்தரம்மாள்:**—"இல்லையில்லை, குறுக்குத் துறையிலல்ல; ஆனால் இரங்கன் பழைய துறையில். அது அவ்வளவாய் நல்ல இடமல்ல. தாங்கள் தயவுசெய்து என் வார்த்தையைக் கேட்பதாயின் தாங்கள் அவளைத் தேடிக் கொண்டு அங்கு செல்வதைவிட அவள் அதைவிட்டு வருமட்டும் நாம் பொறுத்திருப்பதே நலமென்று

நான் கூறுவேன். அந்த விடத்தில் அவள் உயிரோடிருப்பவர்களைக் காட்டிலும் இறந்தவர்களோடேயே விவகாரம் செய்துகொண் டிருப்பாள். அச்சமயத்தில் அவளுக்குத் தொந்தரை யளிப்பது நலமல்லவென்றே நினைக்கிறேன். அவளைப் போன்றவர்கள் அத்தகைய காரியத்திலிருக்கையில் அன்னியர் தங்களைக் காண்பதை விரும்பமாட்டார்கள்'' என்றாள்.

இவையாவும் கேட்ட மார்க்கசேனன் உடனே பதில் ஒன்றும் கூறவில்லை. உடனே தன் மேல் போர்வையை யணிந்து கொண்டு, தான் வழக்கமாய் நடப்பதை விடத் துரிதமாக நடந்து தன் வீட்டிற்கு மூன்று நான்கு மைல் தூரத்திலிருக்கும் ஒரு பாழடைந்த கோயிலை நோக்கிச் சென்றான்.

சுந்தரம்மாளும் இரங்கநாதம்பிள்ளையும் பேசாமல் நின்று அவன் செல்வதைப்பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். அவன் சந்தடி கேட்கும் தூரத்திற்கப்பால் போனதும் அவர்களிருவரும் ஒருவரையொருவர் உற்று நோக்கி, இருவரும் ஒரே அபிப்பிராயமுடையவர்கள் போல் சிரக்கம்பம் செய்துகொண்டு ஏககாலத்தில், "எப்போதும் மூடர்களுக்கு அவசரமும் ஆத்திரமும் அதிகம்'' என்றார்கள். அதன் பின் இருவரும் ஒருவரை யொருவர் உற்று நோக்கிக்கொண்டார்கள்.

அதன்பிறகு இரங்கநாதம் பிள்ளை:—"மூடர்களுக்கு எப்போதும் ஆத்திரகுணமே. நமக்கு இயற்கையாக உள்ள குணத்தை நாம் கற்றுக் கொள்வதால் அடைய முடியாது. அவசரக்காரரைத் தடுக்க முயன்றவர்களை நான் பார்த்திருக்கிறேன். திருட்டாந்தமாகச் சிலரை நான் கூறவே கூடும்'' என்றான்.

சுந்தரம்மாள்:—"நீ சீக்கிரம் சென்று உன் படகுகளைப்

புறப்படச் செய்யவேண்டும். என் எஜமான் குணம் உனக்குத் தெரியாது. இந்த வாலிபன் விஷயத்தில் என் மனம் மிக்க வேதனை யடைகிறது. அதோடு நீ யுன் படகுகளைக்கொண்டு தேடுவதற்குள் அவன் எங்கேனும் போய் விடுவானோவென்று எனக்குப் பயமாயிருக்கிறது. நீ யுடனே என் எஜமான் கூறிய படி அவ்வாலிபனைத் தேடப் படகுகளை விடாவிட்டால் அவனிடமிருந்து ஒரு காசு கூடப் பெறமுடியாது" என்றாள்.

இரங்கநாதம்பிள்ளை:—"சரீ சரி; நீ கூறுவது உண்மையே. நம்மாலான படகுகளை வெளியிலனுப்புவோம். நற்காலமாய், இரங்கன், சுப்பன், ஆண்டி இவர்கள் படகுகளெல்லாம் முன்னமே வெளியில் சென்றிருக்கின்றன. அடடா! இத்தீவில் புத்திசாலியான மனிதர் ஒருவருமே இல்லையென்று கூறலாகும்; அவரவர்கள் தம்தம் காரியத்தைப் பார்த்துக் கொள்ளுகிறவர்களாகவே யிருக்கிறார்கள். இத்தீவின் முதலாளியாகிய நமது தலைவன் தைரியநாதம் பிள்ளை யிருக்கிறான். அவன் தன் வரையில் தன் க்ஷேமத்தைக் கவனிக்கிறான். அவனுடைய மூத்த குமாரத்தியாகிய மீனாள் இப்போது எக்காரணத்தாலோ மனச்சலனமடைந்திருக்கிறாள் என்று கூறுகிறார்கள். நமது நாகம்மாள் இருக்கிறாள். அவள் ஏதோ அதிக சாமார்த்திய முடையவளென்று கருதப்படுகிறாள். எனக்கென்னமோ அவள் புத்திசாலியென்று தோன்றவில்லை. நமது தீவிலுள்ள ஒவ்வொருவரும் இப்படித்தான் ஏறக்குறைய விருக்கிறார்கள். இங்கு நமக்குத் தலைவனாகவிருக்கும் மார்க்கசேனனோ மிக்க அவசரக்காரன் என்பது தெரிகிறது. அவன் மகனோ

பெரிய துடுக்கன். ஆகையால் நம்மிருவரைவிட இங்கு புத்திசாலிகளென்று கருதக்கூடியவர்கள் வேறு யாரேனுமிருப்பதாக எனக்குப் புலப்படவேயில்லை.'' என்றான்.

சுந்தரம்மாள் "இவ்விஷயத்தில் நீ கூறுவது சரியாகவே யிருக்கலாகும். ஆயினும் தற்காலச் சங்கதியைக் கவனிக்கும்போது நீ சீக்கிரம் புறப்படாவிடின் சரியான நீரோட்டம் உன் படகுகளுக்குக் கிடைக்காது போகும்'' என்றாள்.

*　　*　　*　　*

மார்க்கசேனன் ஒரு புராதனக்கோயிலை நோக்கிச் சென்றான் என்று கூறினோமல்லவா. அக்கோயில் ஆதியில் மிக்க பிரசித்திபெற்றதாக விருந்தது. பிறகு உண்டான மதச்சண்டைகளால் அக்கோயில் கைவிடப்பட்டு அழிந்து போகும் நிலையடைந்தது. அது கடற்கரையோரத்திலிருந்ததால் புயற்காற்று முதலியவற்றால் அக்கோயிலின் பெரும் பாகம் மணலால் மூடப்பட்டுப் போயிற்று. ஆயினும் நமது கதை நடக்கும் காலத்தில் அதன் தென்பாகத்தில் மட்டும் அக்கோயில் சற்று சரியான நிலைமையிலிருந்தது. அக் கோயிலில் ஒரு பெரிய மகான் அடங்கியிருப்பதாகவும், அவருக்குப் பிரார்த்தனை செய்துகொண்டால் தங்கள் கோரிக்கை யெதுவாயினும் அது நிறைவேறும் என்பதும் அத்தீவாருடைய கொள்கை. அது மட்டுமல்ல. ஒருவன் இம்முறை தன் பூமியில் தானியம் சரியாகவிளைந்தால் உனக்கு இன்ன பிரார்த்தனை செலுத்துவேன் என்று கூறிக் கொள்வான். தன் காரியம் நிறைவேறிலோ கட்டாயம் தான் வாக்களித்தபடி பிரார்த்தனையைச் செலுத்தத் தவறவே மாட்டான்.

அந்தக் கோயில் ஒரு மகானுடைய சமாதி. அது

இப்போது பாழடைந்திருந்தாலும் உள்பக்கம் கொஞ்ச பாகம் அழியாமலிருக்கிறது. ஆனல் சுமார் மூன்று நான்கடியுயரம் மணல் நிறைந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் இரண்டு சாளரங்கள் இருக்கின்றன. அவற்றில் கதவுகளில்லை. பிரார்த்தனை செலுத்தச் செல்வோர் அந்த உள் பிரகாரத்தை மூன்றுமுறை சுற்றியபின் ஒருசாளரத்தின் வழியாகத் தாங்கள் செலுத்தவேண்டிய காணிக்கையையுள்ளே போட்டு விடுவார்கள். போட்டவுடனே அங்கு நில்லாமல் துரிதமாக நடந்து சாளரத்திற்கு நேராய் வெளியேசென்று அக்கோயில் எல்லையைத் தாண்டியதும் திரும்பி அச்சாளரத்தை நோக்குவார்கள். ஏனெனில் அங்கு அடைந்திருக்கும் மகானுடைய எலும்புருவம் அச் சாளரத்தில் தோன்றித் தாங்கள் போட்ட காணிக்கையை யெடுத்துக்கொள்கிறது என்ற நம்பிக்கை யவர்களுக்குப் பூரணமாகவுண்டு. ஒருவர் மனேபாவத்தால் ஒரு விஷயத்தைச் சற்றும் ஐயமின்றிப் பூரணமாக நம்பிக்கொண்டால் அவர்களின் மனேபாவமே அவ்வாறு தோற்றுவிக்கலாகும். அம்மாதிரி பல திருட்டாந்தங்களுண்டு.

இத்தகைய ஏகாந்தமான பாழடைந்த கோயிலுக்கே நமது மார்க்கசேனன் சென்றுன். அவன் மனதில் மத விஷயமான பீதியொன்றுமேயில்லை. மற்றபேரைப்போல் அந்த விடத்தைப்பற்றிய மூடக்கொள்கைகளையும் அவன் நம்புகிறவனல்ல. அந்த நாட்டாருக்கிருக்கும் மூடத்தனமான பீதிகள் அவனுக்கு எள்ளளவும் கிடையா. அவன் இயற்கையாய் வீட்டை விட்டு எங்கும் செல்கின்றவனல்ல. அங்குள்ள மற்றபேர் வாரம் ஒரு முறை கோயிலுக்குச் செல்வதுபோல் அவன் செல்வதுமில்லை. ஆகையால் யாவரும் அவன் பேய் வயப்பட்டவன் என்றே கருதியிருந்தார்கள்.

மார்க்கசேனன் அக்கோயிலின் அருகிற் சென்றதும் நின்று நாற்புறங்களிலும் உற்று நோக்கினன். அக்கோயிலின் எதிரில் இருபுறங்களிலும் நீண்ட உயரமான பாறைச் சுவர்கள் கடல் வரையில் செல்கின்றன. இன்னும் அக்கோயில் இருந்த அமைப்பால் கடலில் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அது தெரியக் கூடியதாகவிருந்தது. மாலுமிகள் தூரத்தில் கப்பலில் வரும்போது அக்கோயிலின் தீபங்கள் சில சமயங்களில் தெரிவதாகவும், அப்படித் தெரியும் சமயங்களில் கப்பற்சேதம் நேரிடுவது நிச்சயம் என்றும் ஒரு வதந்தியுண்டு. அதை யாவரும் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

மார்க்கசேனன் அக்கோயிலினருகிற் சென்றதும், அவன் தன்னை யறியாமலே என்ன காரணத்தாலோ ஒருவரும் தன்னைக் காணலாகாது என்று கருதுபவன் போல் மிக்க எச்சரிக்கையோடு நடந்து கொண்டான். கடைசியில் அவன் மயான பூமியின் சுவர்களின் அருகில் வந்து சேர்ந்தான். அத்திக்கில் காற்று மணலை யதிகமாக வீசிக்கொண்டிருந்தது.

அச்சமயம் அதேயிடத்தில் வேறு யாரேனும் வந்திருந்தால் அவர்கள் ஒரு விநாடிகூட அங்கு அச்சமின்றி நிற்கமாட்டார்கள். ஏனெனில் அது சாதாரணமாய் மயான பூமி. ஜனங்கள் எப்போதும் அங்கு செல்லப் பயப்படுவார்கள். அது நிர்ச்சந்தடியானவிடம். அத்தகைய விடத்தில் சென்ற மார்க்கசேனன் அங்கு நின்று நாற்புறங்களிலும் சற்றும் அச்சமின்றி நோக்கினன்.

---

## 39—வது அத்தியாயம்.

மார்க்கசேனன் தான் நிற்குமிடத்திற்கு நேராய்ச் சுவரில் இருந்த வெடிப்புகள் ஒன்றின் மூலமாய்த் தான் தேடி வந்த ஆளைக்கண்டான். அவள் இருக்கும் மாதிரியை நோக்க அவளைப்பற்றி ஊரார் கூறும் வதந்தி, அதாவது அவள் பேய்கள் பூதங்கள் முதலியவற்ருேடு சினேகமுடையவள் என்பது மெய்யென்று தெரிந்தது. சாதாரணமாய் அச்சங்கதி மிக்க அபூர்வமானதாகவே யாவராலும் கருதப்படும்.

அங்கு அவன் கண்ட ஆள் பிச்சிமலை நாகம்மாளே; அச்சமயம் அவள் அங்கிருந்த ஒரு சமாதியருகிலிருந்தாள். அச்சமாதியின்மேல் கட்டப்பட்டிருந்த கோபுரத்தின் ஒரு புறம் ஒரு போர் வீரன் குதிரைமேல் நின்றிருப்பது போன்ற உருவம் செதுக்கப்பட்டிருந்தது. மற்ருெரு புறம் ஒரு கேடயமும், பட்டச் சின்னமும் அமைக்கப் பட்டு சரியாக உருத்தெரியாதபடி கிலமாய் விட்டிருந்தன. அக்கோபுரத்தின் கீழ் தைரியநாதம் பிள்ளையின் முன்னோர்களில் யாரோ அடக்கம் செய்யப்பட்டிருப்பதாய் மார்க்கசேனன் கேள்விப்பட்டிருக்கிருன். அப்படி அங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஆள் பதினைந்தாவது நூற்ருண்டில் உலகில் மிக்க பிரசித்தி பெற்றிருந்தவர். தைரியமும் துணிகரமுமான செயல்களிலும் கோரமான யுத்தங்களிலும் மிக்க புகழ்பெற்ற வீரர். நாகம்மாள் அந்த வீரரின் சமாதியின் கீழிருந்த மணலைத் தோண்டியெடுத்துக் கொண்டிருந்தாள். அந்த விடத்தில் அது சுலபமான வேலையே. காற்று மூடிய மணலைச் சீக்கிரத்தில் அப்புறப்படுத்தி அங்கு சமாதியடைந்திருந்தவருடைய எலும்புக் கூண்டை வெளிப்படுத்தி விடுவாள்போல் தோன்றியது.

அவ்வேலையைச் செய்துகொண்டே அவள் ஒருவிதமான பாட்டுப் பாடிக்கொண்டிருந்தாள்.

நாகம்மாள் அப்பாட்டின் முதல் பாகத்தைப் பாடி முடித்தபோது அந்தப் பூர்வீக வீரனுடைய சவப்பெட்டியின் ஓர் பாகத்தை வெளிகாணும்படி செய்து விட்டாள். அதின்மேலிருந்த எஃகுத் தகட்டின் ஓர் பாகத்தைப் பெயர்த்தெடுத்துவிட்டாள். அதன்பின் அவள் பக்தியோடு அப்பெட்டியின்மேல் மணலைப்போட்டாள். அவள் அப்பாட்டை முடிப்பதற்குள் அச்சவக்குழியை யவள் தோண்டினாள் என்றதற்கு அத்தாட்சியில்லாமல் போய் விட்டது.

மார்க்கசேனன் பின் பக்கமிருந்து அவள் நடக்கையைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் அவளிடம் பக்தியாவது மரியாதையாவது வைத்து அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அவள் செய்யும் வேலைக்கு மரியாதை வைத்தும் அப்படிச் செய்யவில்லை. மற்றபடி அவன் ஏன் பொறுமையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான் என்றால், தான் அவளிடம் ஒரு சங்கதியைக் கேட்கவந்திருக்கிறான். அவளோ பைத்தியக்காரி, அவள் காரியத்தில் அவளுக்கு இடையூறு செய்தால் அல்லது தடங்கல் உண்டாக்கினால் அவள் மூலமாய் நாம் அறியவேண்டிய சங்கதியை யறிவதற்கு முடியாமற்போகும். அவள் முகம் அவளுடைய கலைந்த கூந்தலால் மறைக்கப்பட்டிருந்தது. அதோடு அவள் மேலே ஒரு கறுப்பு மூடியணிந்திருந்தாள். அப்படியிருந்தும் மார்க்கசேனன் அவளை நன்றாக உற்று நோக்க அவகாசமிருந்தது. மார்க்கசேனன் அடிக்கடி நாகம்மாளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். அது மட்டுமல்ல, அவளை யவன் அடிக்கடி பார்த்தேயிருப்பான். ஏனெனில் அவன் ஜலபுரத்திற்கு வந்தபின் அவள் பன்

முறை யவ்விடத்திற்குச் சமீபத்தில் வந்திருப்பாள். ஆனால் அவளைப்பற்றிப் பிரஸ்தாபமாக விருந்த சமாசாரங்களைக் கேட்டு அவள் ஒரு பைத்தியக்காரியாக விருக்கவேண்டும், அல்லது பொய்க்குறி கூறுகிறவளாக விருக்கவேண்டு மென்று அவன் கருதியபடியால் அவளைப் பார்க்கவேண்டு மென்று மனங்கொள்ளவில்லை.

இப்போது அந்த விடத்தில் அவளை யுற்றுநோக்கிய போது அவனுடைய பழைய அபிப்பிராயம் மாறியது. இப் போது அவள் செய்கையைக் கவனித்ததில் அவள் மிக்க நிதானமும் கலக்கமற்றதுமாகிய மனமுடையவளென்றும் அப்படிக்கின்றேல் இவள் பெரிய ஜாலக்காரியாக இருக்க வேண்டுமென்றும் தோன்றியது. தான் இருக்குமிடத்தைப் பற்றி யவளுக்குச் சற்றும் அச்சந்தோன்றுவதாகக் காண வில்லை. எப்படியெனில் நாகம்மாள் மயான பூமியாகிய அக்கோயிலுக்குள் மிக்க நிம்மதியான மனதோடு வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் நிதானமாய் அங்கிருந்த சவப்பெட்டியின் சுற்றிலுமுள்ள மணலைக்கிளறியெடுத்து அப்பெட்டியை வெளியிலிழுத்து அதன்மேலிருந்த தகட் டின் ஒரு பாகத்தைப் பெயர்த்தெடுத்து மறுபடி பழைய படி யதையமைத்துப் பெட்டியை யதன் இடத்தில் வைத்து முன்போலவே யாவற்றையும் அமைத்து விட்டாள்.

அவள் செய்கைகளைக்கண்டதே மார்க்கசேனன் மனதில் அவளைப்பற்றிய அபிப்பிராயம் - மாறின அபிப்பிராயம்— அதிகமாக உறுத்தியது. அப்போது இருந்த அவளுடைய சாந்தமான நிதான நடக்கையும், அச்சமின்மையும், கம்பீர மான தோற்றமும் அவன் மனதைக் கலக்கிவிட்டன. அவளுடைய காரியம் முடிந்ததும், மார்க்கசேனன் மயான பூமியின் இடிந்த சுவர்களின்மேல் கஷ்டத்தோடேறி உள்ளே சென்று நாகம்மாள் முன் நின்றான்.

அந்த இடத்தில் அத்தகைய சமயத்தில் திடீலென்று ஒருமனிதர் வந்து எதிரில் நின்றால் எத்தகைய தைரிய முடையோரும் திடுக்கிட்டு அலறிவிடுவார்கள். ஆனால் நாகம்மாளோ எள்ளளவேனும் திடுக்கிடவுமில்லை வியப் படையவுமில்லை. அவள் அவன் அங்கு வருவானென்று முன்னமே அறிந்தவள்போல் "ஹா! கடைசியில் என்னைத் தேடி வந்தாயா ?" என்றாள்.

**மார்க்கசேனன்:**—ஆம். தேடிவந்தேன்; உன்னைக் கண்டு பிடித்தும் விட்டேன். அதிலும் கடைசியில் எல்லா ரும் சேரவேண்டியதாகிய இடத்தில் மயான பூமியில் கண்டுபிடித்தேன். இதுவும் ஒரு அதிசயமே!

**நாகம்மாள்:**—ஆம். மயான பூமியில் தான் கண்டாய்—எல்லாரும் கடைசியில் சந்திக்கவேண்டிய இடத்தில்-இறந்தவர்களின் வாசஸ்தலங்களின் மத்தியில்.

மார்க்கசேனன் ஆம் என்று நாற்புறங்களிலும் சுற் றிப் பார்த்துக்கொண்டே, "ஆம். இந்த இடத்தில்தான் கடைசியில் மரணத்தின் பின் எல்லாரும் ஒன்றாகச் சேர வேண்டியது. ஆனால் யார் சீக்கிரத்தில் வந்து சேருகிறார் களோ அவர்கள் சுகமடைவார்கள்" என்றான்.

**நாகம்மாள்:**—இந்த இடத்தில் சுகத்தை யடைந்திருக்க விரும்புகிறவன் தன் உலக வாழ்க்கையில் நேர்மை யோடு நடந்து கொண்டவனாக விருக்கவேண்டும். என் வரையில் அத்தகைய சுகத்தை யெதிர் பார்ப் பதற்கில்லை. நீ யதை யெதிர் பார்க்கும் தைரிய முடையவனாக விருக்கிறாயா? அல்லது நீ நடந்து கொண்ட மாதிரியால் அதற்குப் பாத்திரவானாக விருக்கிறாயா ?

**மார்க்கசேனன்:**—என்னுடைய தற்கால விவகாரத்திற்கு அதைப்பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

என் புத்திரன் முருகப்பனைப்பற்றி யுனக்கு என்ன சமாசாரம் தெரியும் என்பதை யறியவே இங்கு வந்தேன். அதாவது அவன் சங்கதிகளைப்பற்றி யுன்னிடம் கேட்கவே வந்தேன்.

நாகம்மாள் அவன் வார்த்தைகளைக் கேட்டு வியப்படைந்தவள் போல் "அடடா! வெகு நேர்த்தி! ஒரு தந்தை தன் சொந்தப்புத்திரனுடைய விவகாரங்களைப் பற்றி அன்னியமான ஒரு ஸ்திரீயினிடம் கேட்கிறான். அவனைப்பற்றிய சங்கதிகளை நான் எப்படி யறிவேன்?

**மார்க்கசேனன்:**—இந்த மர்மமான கட்டுக்கதைகளையெல்லாம் ஒரு பக்கம் கட்டிவைத்துவிடு. சாதாரணமான மூட சிகாமணிகளிடம் இந்த ஜம்பம் பலிக்கும். அவர்கள் அதனால் ஏமாந்து போவார்கள். என்னிடம் அத்தகைய அம்புகளை யெய்வதால் பயனில்லை. உன்னுடைய சுற்றத்தாராகிய தைரியநாதம் பிள்ளையின் வசந்த மாளிகையில் நடந்த கேளிக்கைக்கு என் மகன் சென்று ஒரு வாரத்திற்கதிகமாய் விட்டும் அவன் இன்னும் திரும்பி வரவில்லை. அவனைப்பற்றிய சங்கதியொன்றுமே தெரியவில்லை. ஜலபுரத்திலுள்ள ஜனங்களெல்லாம் என் மகனைப் பற்றிய சங்கதி யுனக்கு நன்றாகத் தெரியும் என்று கூறுகிறார்கள். உண்மையில் அவனைப்பற்றிய சமாசாரம் ஏதேனும் உனக்குத் தெரிந்திருந்தால் தயவு செய்து கூறு. அதற்கு ஈடு செய்யவேண்டிய சக்தி என்னிடமிருந்தால் நான் ஈடு செய்யச் சற்றும் தடையிராது.

**நாகம்மாள்:**—"நான் என் வாக்கால் கூறுவதற்கு ஈடாக எனக்கு அளிக்கத் தக்க பொருள் இந்த அகன்ற

பரப்புடைய பூவுலகில் எதுவுமில்லை. ஆகையால் அதைப்பற்றி மறுபடி கூருதே. உன் புத்திரனைப்பற்றி அறியவேண்டுமாயின் கூறுகிறேன் கேள். நீ யுன் புத்திரனை யுயிரோடு காணவிரும்பினுல் சமீபத்தில் குறுக்குத் தீவில் நடக்கப்போகும் கேளிக்கைச் சந்தைக்குச் செல்'' என்று சாந்தமாகவே மொழிந்தாள்.

**மார்க்கசேனன்:**—சரி, நான் அங்கு ஏன் செல்ல வேண்டும்? அந்தத்திக்கில் அவனுக்கு ஒரு வேலையுமில்லையென்று எனக்குத் தெரியுமே.

**நாகம்மாள்:**—ஒரு மனிதன் துடுப்பாவது, சுங்கானுவது திசையறிகருவியாவது இல்லாமல் கடலில் ஒருபடகில் செல்வதுபோல் நாம் வினையின்படி உலக வாழ்க்கையாகிய படகில் செல்கிறேம். அப்படகை யிழுத்துச் செல்லும் காற்று நமது வினைப்பயனேயன்றி வேறென்றுமில்லை. இன்று காலையில் இந்த இரங்கன் துறையிலுள்ள இக்கோயிலுக்கு வரவேண்டுமென்ற நினைவு உனக்கு இல்லவேயில்லை. என்னைக் காண வேண்டுமென்ற கோரிக்கையுமில்லை. என் இந்த இரண்டு விஷயங்களும் உன் மனதில் இல்லவேயில்லை. அப்படியிருந்தும் நீ யிங்கு வந்திருக்கிறுய். குறுக்குத் தீவிற்குப் போகவேண்டுமென்ற எண்ணம் ஒரு நிமிடத்திற்கு முன் உனக்கில்லை. ஆயினும் நீ யங்கு செல்வாய்.

**மார்க்கசேனன்:**—"நான அங்கு செல்லவேண்டியதற்குத் தக்க காரணம் எனக்கு விவரமாய்த் தெரிந்தாலன்றி நான் அங்கு செல்லமாட்டேன். அம்மையே! உன்னிடம் தெய்வீக வல்லமையிருக்கிறதென்று கூறுகிறவர்களை நான் நம்புவதில்லை'' என்முன்.

அவன் மொழிகளைக்கேட்டதே நாகம்மாள் முகம் சிவந்து விட்டது. அவள் தேகத்தில் ஒருவிதப் படபடப் புண்டாயிற்று. அவள் அவனை யலட்சியமான பார்வை யோடு நோக்கி,

"அப்படியா கூறினை! நாம் இங்கிருந்து பிரிந்து போகு முன் நீ யவற்றைக் கட்டாயம் நம்புவாய். இன்னும் உனக்கு என்னைப்பற்றிக் கொஞ்சம், மிகக் கொஞ்சமே தெரியும். நீ யதிகமாக அறிந்து கொள்ளப்போவதுமில்லை. ஆனல் எனக்கு உன்னைப்பற்றிப் பூரணமாகத் தெரியும். அப்படித் தெரியுமென்பதை யொரே வார்த்தையால் திரு பித்து விடக்கூடும்" என்றாள்.

அம்மொழிகளைக் கேட்ட மார்க்கசேனன் சொல் லொணு வியப்பும் கலக்கமுமடைந்து, சற்று அச்சத் தோடேயே அம்மூதாட்டியை நோக்கி,

"அப்படியாயின் அதை நான் நம்பும்படிசெய். அப் படிச் செய்யுமட்டும் நான் உன் ஆலோசனைப்படி நடப்பது ஆகாத காரியமே" என்றான்.

நாகம்மாள்:—"அப்படியாயின் நான் உன் மைந்தனைப் பற்றிய விஷயத்தைக் கூறுகிறேன் கேள். அப்படிக் கின்றி நான் உன் சொந்த விஷயத்தைப்பற்றிக் கூறு வதாயின் நீ யதன் பிறகு வேறெந்த விஷயத்தையும் சிந்திக்க முடியாமற் போய்விடும். நீ இப்போது குறுக்குத்தீவில் நடக்கும் கேளிக்கைச் சந்தைக்குப் போகவேண்டும். அக்கேளிக்கையின் ஐந்தாவதுநாள், பகல் உச்சிப்பொழுது வேளைக்கு, அங்குள்ள மகா தேவர் கோயிலின் வெளிப்பிரகாரணத்தின் வடக்கு பக்கத்தில் சென்றால் அங்கு ஒரு ஆளைக் காண்பாய். அந்த ஆளால் உன் மகனுடைய சங்கதிகள் உனக்குத் தெரியவரும்" என்றாள்.

மார்க்கசேனன்:—"நான் உன் புத்திமதிப்படி நடக்க வேண்டுமென்று நீ எண்ணினால் நீ இன்னும் சற்று வெளிப்படையாய் எனக்குக் கூறவேண்டும். என் காலத்தில் நான் மாதர்களால் அதிகமாக மோசம் செய்யப்பட்டேன். ஏமாற்றப்பட்டேன். நீ கூறு வதைப்பார்த்தால் அவை யாவற்றிலும் அதிகமாக விருக்கும்போல் தெரிகிறது" என்றான்.

அவன் மொழிகளைக்கேட்ட நாகம்மாள் சற்று ஆத்திரத்தோடு, "அப்படியாயின் இதைக்கேள். இப்போது நான் கூறும் வார்த்தை உன் இருதயத்தின் அருகிலுள்ள ஒரு பெரிய இரகசியத்தைக் கிளறி யுன் தேகத்திலுள்ள நரம்புகளனைத்தும்-எலும்புகள் கூடத் துடிக்கச்செய்யும்" என்று கூறியபின் அவன் அருகில் சென்று குனிந்து அவன் செவியில் ஒரே யொரு வார்த்தை கூறினாள்.

அவ்வார்த்தை மிக்க அருமையான ஒரு பெரிய மந்திரத்தைவிட அதியற்புதமானவேலை செய்துவிட்டது. அதைக்கேட்டதே மார்க்கசேனன் சொல்லொணு வியப் படைந்து மின்னலால் தாக்கப்பட்டவன்போல் திகைக்கு மரம்போல் அப்படியே மரம்போல் நின்றுவிட்டான். நாகம்மாள் ஜெயமடைந்தவள்போல் தன் கரத்தை யுயரத் தூக்கி யாட்டிக்கொண்டே அக்கட்டிடத்தின் ஓர் மூலையில் திரும்பித் துரிதமாய் அவன் பார்வைக்கு மறைந்துபோய் விட்டாள்.

மார்க்கசேனன் அவள் பின்னால் செல்லவாவது, அவளை மறுபடி கண்டுபிடிக்கவாவது முயலவில்லை. அவன் தன் மனக்கலக்கத்தை யொருவாறு சமாளித்துக்கொண்டு "நாம் நமது வினைப்பயன்களிலிருந்து ஓடிவிட முடியாது." என்று கூறிக்கொண்டே அந்த விடத்தை விட்டுப் புறப் பட்டான். அவன் அக்கட்டிடத்தைவிட்டுத் தூரத்தில்

சென்றபின், அது கண்ணுக்கு எட்டுந்தூரத்தில் நின்று திரும்பிப் பார்த்தான்.

மார்க்கசேனன் அங்கு நின்று திரும்பிப்பார்த்த போது, அக்கட்டிடத்தின் உயரமான கோபுரத்தின் உச்சியில் நாகம்மாள் நின்றுகொண்டு வெள்ளைக் கொடி போன்ற ஒன்றைத் தன் கரத்தில் பிடித்து உயரத்தூக்கி விசிறிக்கொண்டிருப்பதைக் கண்டான். அக்காட்சியைக் கண்டதே அவன் மனதில் ஒருவித அபூர்வமான பீதியுண்டாய் விட்டது. அவன் மறுபடி திரும்பிப் பாராமல் அங்கிருந்து மிகத்துரிதமாய் அந்த விடத்தைவிட்டு நடந்தான்.

அவன் ஜலபுரத்திலுள்ள தன் வீடு போய்ச்சேர்ந்த போது அவன் முகத்திலிருந்த கலவரத்தைக் கண்ட ஸ்திரி பஸ்தியாகிய சுந்தரம்மாள் இவன் முன்போல் எங்கே மூர்ச்சையடைந்து விடுவானோ வென்று மனக்கலக்க மடைந்தாள். "இவன் அந்த இரங்கன் துறையிலுள்ள அக்கோயிலில் நாகம்மாளைப் பார்த்துவிட்டு வந்திருந்தால் வேறெப்படித்தா னிருப்பான்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

சுந்தரம்மாள் மார்க்கசேனன் வந்தவுடனே அவனுக்கு உபசாரம் செய்து சிற்றுண்டி யளித்தாள். அவன் அதை யருந்தியபின் சற்றும் கலக்கமின்றிச் சாதாரணமான ஒரு சமாசாரத்தைக் கூறுபவன்போல் ஆனால் ஒருவிதமான மனத்தாங்கலுடையவன்போல் "நான் குறுக்குத் தீவில் நடக்கும் கேளிக்கைச் சந்தைக்குப் போகப் போகிறேன்'' என்றான். அத்தகைய நடக்கை அவனுடைய இயற்கைக் குணத்திற்கு முற்றும் மாறானதாகையால் சுந்தரம்மாள் அதைப்பற்றி மிக்க வியப்படைந்ததோடு, இவனாவது ஒருவிடத்தில் கேளிக்கை நடக்கும் போது அங்குசெல்வதாவது, இது எங்கேனும் நம்பத்தக்க

விஷயமோ'' என்று தனக்குள் சந்தேகப்பட்டாள். மறு நாள் தன் புத்திரனைப்பற்றித் தேடிக்கொண்டு சென்றவர்க ளெல்லாம் திரும்பி வந்து தாங்கள் அவனைக் காணக்கூட வில்லையென்றும் அவனைப்பற்றி ஒரு சங்கதியும் தெரிய வில்லையென்றும் கூறிய போது மார்க்கசேன்ன் அவற் றைக்கேட்டு எவ்வித கலக்கமுமடையவில்லை. அச்சமா சாரங்களை யடியோடு அலட்சியம் செய்துவிட்டான். இந்த விஷயத்தைக் கண்டபோது சுந்தரம்மாள் "ஓகோ! இவன் பிச்சிமலை நாகம்மாளைச் சந்தித்து அவள் மூலமாய்த் தன் புத்திரன் சமாசாரத்தைப்பற்றி ஏதோ அறிந்துகொண்டே வந்திருக்கவே வேண்டும். இன்றேல் இந்த ஆட்களெல் லாம் வந்து கூறிய அதிருப்தியான சமாசாரம் இவன் மனதை வாதிக்காமற் போயிரா'' என்று தனக்குள் கருதிக்கொண்டாள்.

மார்க்கசேனன் பலபேர் கூடும் ஒரு கேளிக்கைக் காவது, விருந்து, கச்சேரி முதலிய விடங்களுக்காவது, ஒரு நாடகம் போன்ற விடத்திற்காவது எப்போதும் போவதில்லை யென்று ஜலபுரத்திலுள்ள அனைவர்க்கும் தெரியும். ஆகையால் இப்போது இவன் குறுக்குத் தீவில் நடக்கும் கேளிக்கைச் சந்தைக்குப் போகிறான் என்ற தைக் கேட்டதே அவர்களெல்லாம் மிக்க வியப்படைந்தார் கள். சுந்தரம்மாளோ "இவன் இதுகாறும் இத்தகைய இடங்களுக்குச் செல்ல வெறுப்படைகிறவனாயிற்றே. அப் படிப்பட்டவன் இப்போது என் குறுக்குத் தீவு சந்தைக் குப் போகிறேன் என்று கூறுகின்றான். நாகம்மாள் என்ன கூறினாளோ. கடைசியில் பாபம் அவ்வாலிபன் சங்கதி என்னவாகுமோ'' என்று மிக்க கலவரமடைந்தாள். ஆனால் மார்க்கசேனன் அவனிடம் நடந்த செலவுகளுக்காக

ஒரு தொகையை யளித்து விட்டு நான் படகேறிக் குறுக்குத் தீவிற்குச் செல்கிறேன் என்று கூறியபோது அவள் மனம் திருப்தியடைந்தது. அந்தோ ! பணத்தின் மகிமை அத்தகையது.

---

## 40-வது அத்தியாயம்

இப்போது நாம் மீனாளின் நிலைமை யெப்படி யிருக்கிறதென்று பார்ப்போம். அவள் இயற்கையாய்ப் பலம் பொருந்திய மனமுடையவள். அதனாற்றான் தன் மனதிலிருந்த பயங்கரமான இரகசியத்தை (குலசேகரன் கப்பற்கொள்ளைக்காரரின் தலைவன் என்ற இரகசியத்தை)த் தன் மனதில் அடக்கி வைத்துக்கொண் டிருப்பதால் உண்டாகும் வேதனையை மிக்க கஷ்டத்தோடேனும் சகித்துக்கொண் டிருந்தாள். அந்த இரகசியம் இரவும் பகலும் அவள் மனதை வாதித்துக் கொண்டே யிருந்தது. நாம் சம்பந்தப்பட்டிருக்கிற பயங்கரமான ஒரு இரகசியத்தை வெளியில் கூறமுடியாமலிருப்பதை விடத் துக்ககரமான விஷயம் வேறொன்றுமில்லை. அதிலும் அவ்விஷயம் நாமே மன்னிப்புப் பெறக்கூடாத விஷயமாகவிருந்தால் பின்னும் கஷ்டமே. அதோடு நம்மால் குற்றமற்ற ஒரு மனதிற்கு மர்மமான ஒரு துயரம் நம்மால் உண்டாயிற்றே என்ற வேதனையும் சேர்ந்தபோது மீனாளுடைய தேகசுகம் குன்றிவிட்டது ஒரு வியப்பாகாது.

மனிதர்க்குண்டாகும் வியாதியில் தேக சம்பந்தமான வியாதி மனோவியாதியென இருவகைகளுண்டு. இவற்றில் தேக சம்பந்தமான வியாதி பூர்வம் செய்த கர்மத்தால் வருவது. ஆனல் இதில் இத்தனை வகைகள் உண்டென்பதையும், அவற்றிற்குச் சிகிச்சையையும் நம்முன்னோர்

அனுதிகாலம் முதலே கண்டு பிடித்து அவ்வாறே மானிடருக்கு நேரும் வியாதிகளைத் தீர்த்து வருகிறார்கள். உலகிலுள்ள மற்ற நாட்டாரும் அவற்றிற்குச் சிகிச்சைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆனால் மனோவியாதிக்கோ இதுகாரும் சிகிச்சை கண்டு பிடித்தவர்கள் ஒருவருமில்லை. மனோவியாதியைப் பற்றி அது இன்னின்ன வகையென்று ஒருவரும் கண்டறிய முடியாது. அதுவும் பூர்வகர்ம சம்பந்தமுடையதெனினும் அதற்குப் பரிகாரம் எந்த வைத்திய சாத்திரத்திலுமில்லை. மீனாள் அத்தகைய மனோவியாதியால் அதிகமாக ஒடுங்கி விட்டாள்.

அவளுடைய நண்பர்கள் அவளுடைய குணம், பழக்கங்கள், நடக்கைள், யாவும் மாறியிருப்பதைக் கண்டதே சிலர் இது யாரோ மாந்திரீகத்தால் செய்த சேட்டையாகவே யிருக்கவேண்டும் என்று கருதினார்கள். சிலர் இல்லையில்லை என்ன காரணத்தாலோ இவள் மனம் சபலமடைந்துவிட் டிருக்கிறது என்றார்கள். சிலர் அதெல்லாமல்ல இவளுக்கு பைத்தியமே பிடித்து விட்டதாகத் தெரிகிறது என்றார்கள். மீனாள் இதுகாறும் தனியாய்த் தன் காலத்தைக் கழிப்பதில் பிரியமுள்ளவள் இப்போது அவ்வாறு தனியாகத் தன்னறையிலிருக்க அவளால் முடியவில்லை. ஆனால் ஜனக்கூட்டமிருக்குமிடத்தில் பிரவேசித்தாலோ அவர்களோடு கலந்து கேளிக்கையிலிருக்கவாவது தன் வரையில் சந்தோஷத்தை யனுபவிப்பதற்காவது அங்கு செல்வதாகத் தெரியவில்லை. அங்குகூட அவள் எப்போதும் உறக்கம் பிடித்தவள் அல்லது ஏதோ துயரத்தில் ஆழ்ந்து கிடப்பவள்போல் சோர்வுற்றிருப்பாள். ஆனால் அங்குள்ளவர்களில் யாரேனும் தற்செயலாய் குலசேகரன் அல்லது முனியப்பன் என்ற பெயரைக் கூறி விட்டால்,

அப்போது ஒரு பெரிய மருந்துக் கிடங்கில் தீ வைக்கப்படுவதைக்கண்ட ஒருவன் எப்படி அது எந்தச் சமயம் வெடித்து நம்மை யழித்துவிடுமோ வென்று பெருந்திகிலோடு நோக்குவானே அதுபோல திடுக்கிட்டு பீதியோடு நோக்குவாள். பிறகு தன்னைப்பற்றிய பயங்கரமான இரகசியம் வெளியாகவில்லையென்று தெரிந்த பிறகே அவள் மனம் சற்று நிம்மதியடையும். ஆயினும் "அந்தோ! எந்நேரமும் இத்தகைய பெருந்திகிலை யனுபவித்துக்கொண்டிருப்பதைவிட இச்சங்கதி வெளியாய் விட்டாலும் மேல்லாகவிருக்குமே" என்று கருதுவாள்.

மீனாள், தன் தங்கையிடம் நடந்து கொள்ளும் மாதிரி அவள் தங்கைக்கு மனவருத்தமாகவே யிருந்தது. இதனாலேயே யாவரும் மீனாள் மனம் சரியான நிலைமையிலில்லையென்று கருதவேண்டியிருந்தது. ஒவ்வொரு சமயம் நமது வியாகூலம் நமது தங்கையின் வியாகூலத்தைவிட மிக்க அதிகமாயினும் பாபம் நம் தங்கையும் வியாகூலத்தில் தானிருக்கிறாள் என்று கருதி அவள் கூடச் சலகரணையாகவே யிருந்துகொண் டிருந்தாள். இருவர், மனதிலும் இருந்த இரகசியமான திகிலும் துயரமும் பூரணமாய் ஒருவர்க்கொருவர் வெளியிட்டவர்களல்ல. இவர்களில் புனிதம் இயற்கையாகவே களங்கமற்ற உள்ள முடையவள். ஆதலின் அவள் மறைக்கக்கூடிய இரகசியம் அவளிடம் ஒன்றுமில்லை. மீனாளோ அப்படியல்ல. அவள் சுபாவகுணமே வெளிப்படையாகக் கூறத்தக்கதல்ல. அதிலும் அவள் தன் காதலனாகிய குலசேகரனைப்பற்றிய பயங்கரமான இரகசியம் சற்றும் வெளியிடத்தக்கதல்ல. அத்தகைய இரகசியத்தை யவள் தன் தங்கைக்கும் வெளியிடாமல் மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறாள். இத்தகைய இருவர் ஒன்றாகக் கலந்தாலும் இருவர்க்கும் சலகரணையா

வது நிம்மதியாவது எப்படி யேற்படும்? ஒருபோதும் ஏற்படாது.

இவற்ருல் மீனுளுடைய துயரமும் மனக்கலக்கமும் வெளிப்படையாகத் தோன்றின. அவள் வெளுத்து மெலிந்து உருக்குலேந்து காணப்பட்டாள். அவள் கண்களிலிருந்த நிம்மதியும், உற்சாகமும், சந்தோஷமுமான பார்வையும் போய்விட்டது. அடிக்கடி அவள் கண்களின் பார்வையில் மங்கலும் பீதியும் கலக்கமும் தோன்றின.

மீனுளின் தந்தையாகிய தைரியநாதம்பிள்ளை அத்தீவிலுள்ள வைத்தியர்களை யெல்லாம் வரவழைத்துப் பார்த்தார். எத்தகைய மூலிகைகளும் அவளைச் சுகப்படுத்த உபயோகிக்கப்பட்டன. தைரியநாதர் தம் அரிய புதல்விக்காகத் தம்மாலான முயற்சிகளை யெல்லாம் செய்து பார்த்தார். ஒன்றுமே பலிக்கவில்லை.

தைரியநாதர் மனம் சகிக்கமுடியாமல் இன்னது செய்வதெனத் தோன்ருது மிக்க கலக்கப்பட்டுக் கடைசியில் தமது சுற்றத்தாளான பிச்சிமலே நாகம்மாளின் உதவியையே கோரவேண்டுமென்று தீர்மானித்தார். ஆனல் அச்சமயம் நாம் முன்கூறிய விஷயங்களால், அதாவது முருகப்பன்மேல் தைரியநாதர் தவருக வெறுப்புகொண்ட காரணத்தால், இவர்களுக்குள் கொஞ்சம் மனஸ்தாபம் இருந்தது. தைரியநாதர் அதையும் கவனிக்காமல் அவள் உதவியைக்கோரினர். அவருடைய முதல் கோரிக்கை பயனடையவில்லை. அச்சமயம் நாகம்மாள் தன்னுடைய சாதாரண வாசஸ்தலமாகிய பிச்சிமலேயிலேயே வசித்துக் கொண்டிருந்தாள். முதலில் வந்து தைரியநாதம்பிள்ளை யுன்னை யழைத்து வரச்சொன்னர் என்று கூறிய மனிதன் கிராமாதிகாரியாயினும் நாகம்மாள் தைரியநாதம் பிள்ளையைக் காணவர மறுத்து விட்டதோடு எவ்வித விடையளிக்

கவும் மறுத்து விட்டாள். நாகம்மாள் "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்ற நிலையிலுள்ளவளாதலால் தன் ஆலோசனையைக் கேட்காத தைரியநாதம் பிள்ளை அவளுக்கு ஒரு வரவாசெலவா?

தைரியநாதம்பிள்ளை, தன்னையும் தான் அனுப்பிய மரியாதையான மனிதனையும் நாகம்மாள் அலட்சியம் செய்ததற்காகவும் தனக்கு விடையளிக்காமல் அவமரியாதை செய்ததற்காகவும் முதலில் மிக்க கோபமடைந்தார். ஆயினும் நாகம்மாளுடைய முன்பின் விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தபோது அக்கோபம் நிலைத்திருக்க முடியவில்லை. ஆகையால் தானே நேராய் நாகம்மாளிடம் செல்வதெனத் தீர்மானித்தார். அவர் இச்சங்கதியைத் தமது மனதிலேயே வைத்துக்கொண்டு தமது புத்திரிகளை நோக்கி "தூரத்திலுள்ள ஒரு சுற்றத்தாரைப்போய் நாம் காணவேண்டும்; அதற்காக ஆயத்தப்படுங்கள். சிலதினங்களுக்குப்போதுமான உணவுப் பொருள்களைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள்; ஏனெனில் அச்சுற்றத்தார் ஒரு சமயம் ஆகாரக் குறைவான நிலைமையிலிருக்கலாகும். சமயம் எப்படியோ இருக்கும். ஆகையால் நாம் எப்போதும் எச்சரிக்கையோடு ஆயத்தமாகவே செல்வது நலம். மேலும் நாம் செல்லவேண்டிய இடம் சற்று தூரமாகவுமிருக்கும்" என்றார்.

குடும்பசம்பந்தமான இத்தகைய விஷயங்களை யெல்லாம் புனிதமே கவனிப்பவள். ஆகையால் இம்மாதிரி தூரமான புது இடத்திற்குச் செல்வதால் மீனாளுடைய மனம் சற்று தெளிவடைந்து சோர்வு நீங்கி, அவளுடைய கலக்கமும் குறையும் என்று கருதிப் பிரயாணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். பெண்கள் தங்கள் தந்தையின் கட்டளைக்குக் காரணமாவது விவரமாவது கேட்கிற

வழக்கமில்லை. கட்டளைப்படி நடக்கவேண்டியதே முறைமை. அதே வழக்கம். அப்படியே மீனாளும் தன் உடைமுதலிய வற்றை யாயத்தமாய்ப் பெட்டியில் வைத்துக்கொண்டு பிரயாணத்திற்குத் தயாராகிவிட்டாள்.

மறுநாள் காலை யாவரும் வசந்தமாளிகையைவிட்டுப் புறப்பட்டார்கள். அன்று கடற்கரையோரமே ஆங்காங்கு கோதுமை முதலிய தானியங்கள் பயிரிடப்படும் பூமிகளி னிடையில் பிரயாணம் செய்துகொண்டு போனார்கள். தைரியநாதம் பிள்ளை ஒரு பலம் பொருந்திய உயரமான தடித்த குதிரைமேலேறிக்கொண்டு சென்றான். மீனாளும் புனிதமும் குதிரைச் சவாரிசெய்வதில் பிரசித்தி பெற்றவர் கள். அவர்கள் தங்களுக்கென்று மிக்க அக்கரையோடும் அதிகசெலவு செய்தும் வளர்க்கப்பட்ட மிக்க அழகான இரண்டு குதிரைகளின்மேல் ஏறிச்சென்றார்கள். இவர்கள் கூடச்சென்ற ஆட்கள் நால்வர். அவர்களில் இருவர் குதிரைகளின்மேலும் இருவர் கால் நடையாகவும் சென் றார்கள். கால் நடையாக வரும் ஆட்களால் இவர்கள் பிரயாணத்திற்கு இடையூறு ஒன்றுமில்லை. ஏனெனில் இவர்கள் செல்லும் பாதையில் பெரும்பாகம் கற் கள் நிறைந்த கரடுமுரடான பூமியாகவும் கால் புதைந்து போகும் மிருதுவான சதுப்பு நிலமாகவுமேயிருந்ததால் குதிரைமேல் செல்கிறவர்கள் மட்டும் நடந்து செல்கிறவர் களைக் காட்டிலும் துரிதமாகப் போய்விட முடியாது. இவர்கள் பிரயாணத்தில் இடையிடையில் ஆங்காங்கு வேறு குதிரைகளை வாடகைக்கு வாங்கவேண்டியதாக விருந்தது.

இவர்கள் பிரயாணம் சந்தோஷமற்றதாகவே யிருந் தது. அதனால் அவர்களுக்குள் சற்றேனும் சம்பாஷணையே யில்லை. தைரியநாதம்பிள்ளை தமக்குண்டான மனவருத்தத்

தால் தம் குதிரையை யதட்டி வேகமாகச் செலுத்த முயன்ருர். ஆனல் அதற்குள் தன் மூத்த குமாரத்தியாகிய மீனுளின் தேக நிலைமையை நினைத்து நாம் வேகமாய்ச் செல்ல முயன்ருல் அவள் தேக சுகத்திற்குச் சரிப்படுமோ வென்று அஞ்சினுர்.

அன்று நடுப்பகல் ஒரு இடத்தில் பகற்போஜனத்திற்காகத் தங்கினுர்கள். அங்கு குளிர்ச்சியான ஒரு சோலையும் தெளிந்த நீரையுடைய ஒரு தடாகமுமிருந்தன. தைரியநாதம்பிள்ளையின் மனம் அச்சமயம் இருந்த நிலைமையில் அங்கிருந்த தெளிந்த ஜலம் அவருக்குத்திருப்தியை யுண்டாக்கவில்லை. ஆகையால் அவர் போஜனம் செய்யும் போது கொஞ்சம் கொஞ்சமாய்த் தம்மிடமிருந்த சாராயத்தை யருந்தத் தொடங்கினுர். போஜனம் முடிவதற்குள் அவர் சாராயமும் திருப்தியா யருந்திவிட்டதால் அதன் போதை வேலைசெய்யத் தொடங்கியது. அதனுல் அவருக்கு முன்புண்டாகியிருந்த வெறுப்பும் மனச் சோர்வும் குறைந்து தமது புத்திரிகளிடம் தாராளமாகப் பேசத் தொடங்கினுர்.

அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டதும் அவர் தம் புதல்விகளை நோக்கி, "குழந்தைகாள்! நாம் இப்போது நமது சுற்றத்தாளாகிய நாகம்மாளின் வாசஸ்தலத்திற்குப் பத்துமைல் தூரத்திலிருக்கிருேம். அவள் நம்மை யெவ்வாறு வரவேற்கிருள் பார்ப்போம்." என்ருர்.

அம்மொழிகளைக்கேட்ட மீனுள் தாழ்ந்த குரலாய்ச் சத்தமிட்டுத் தன் தந்தையின் சம்பாஷணையைத் தடுக்க முயன்ருள். அதற்குள் புனிதம் தன் தந்தை நாகம்மாளிடம் செல்வதைக் கேட்டதே மிக்க வியப்படைந்து "ஓ இப்போது நாம் செல்வது நாகம்மாளைக் காணவா? ஐயோ கடவுளே!" என்ருள்.

அவள் மொழிகளைக் கேட்ட தைரியநாதம்பிள்ளை கொஞ்சம் ஆத்திரத்தோடு "என் அய்யோ கடவுளே என்கிறாய். இத்தீவில் எந்த ஸ்திரீயேனும் இச்சமயம் உன் தமக்கைக்குச் சகாயம் செய்வதாயின் அவளே செய்ய வேண்டும். அப்படியிருக்க என் சுற்றத்தாளை நான் பார்ப்பதைப்பற்றி நீ யேன் அப்படிக் கூறவேண்டும். புனிதம் நீயொரு முட்டாள். உன் தமக்கை புத்தியுடையவள். ஓமீனு! நீ உற்காசத்தோடிரு. நீ எப்போதும் அவளுடைய பாட்டுகளைக் கேட்டுச் சந்தோஷமாய் அவளிடம் விளையாடிக்கொண்டிருந்தாய். உன் தங்கை எப்போதும் அவளைக் கண்டால் அச்சத்தோடு தூரத்தில் ஓடிக்கொண்டிருந்தாள்" என்றார்.

புனிதம் தன் தமக்கைக்கு உற்சாகமுண்டாக்கவும் தன் தந்தையின் சம்பாஷணையை வளர்த்தவும் கருதி "அப்பா! இன்று அவள் அம்மாதிரி யென்னை மிரட்ட முடியாதென்று கருதுகிறேன். நான் அவள் வாசஸ்தலத்தைப்பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறவரையில் அவளே யழைக்குமுன் அங்கு செல்வதென்றால் எனக்குப் பயமாகவேயிருக்கிறது" என்றாள்.

அவள் தந்தை:—"நாகம்மாளைப்போன்ற அன்பும், களங்கமற்ற உள்ளமும் உடையவர்களிடம் தங்கள் சுற்றத்தார் வந்தால் எங்கேனும் வெறுப்படைவார்களோ! அப்படி நினைப்பதாயின் நீ முட்டாளாயிருக்கவேண்டும். அதனாற்றான் "நம்மிடம் வருவதற்கு இவர்கள் ஒரு ஆளை யனுப்பி நமது விருப்பத்தைக் கேட்பானேன்" என்று கோபங்கொண்டே கிராமாதிகாரிக்கு விடையளிக்காமல் அனுப்பிவிட்டாள் என்று எனக்கு இப்போது நன்றாய்த் தெரிகிறது. நான் அவள் வாசஸ்தலத்திற்குச் சென்று நெடுநாளாய் விட்டது.

உங்களை பொருபோதும் அங்கு அழைத்துச்சென்றதேயில்லை. அதனால் நான் அன்பில்லாதவனென்று என்மேல் குற்றம்கூற அவளுக்குக் காரணம் இருக்கிறது. ஆனால் நான் அவளிடம் உண்மையைக்கூறி விடுகிறேன்.'' என்றார்.

புனிதம்:—"இச்சமயம் நாம் நாகம்மாளுக்குத் தொந்திரையளிப்போமென்ற பீதி சற்றுமில்லை. ஏனெனில் நமக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருள்களும் நான் ஏராளமாகக் கொண்டுவந்திருக்கிறேன். பதனிட்ட மாமிசம், வேறு பதார்த்தங்கள், உமக்கு வேண்டிய சாராய வகைகள் யாவும் தாராளமாகக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றாள்.

தந்தை:—"குழந்தாய்! நீ நல்ல காரியம் செய்தனை. ஆயத்தமாய்ச் சகல வஸ்துக்களோடும் புறப்படும் ஒரு கப்பலின் பிரயாணம் எப்போதும் சுகமாகவேயிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆகையால் இப்போது நமக்கு வேண்டியது நாகம்மாளின் வாசஸ்தலத்தில் தங்கக் கொஞ்சம் இடமும் உங்களுக்குப் படுக்கையுமே. என் வரையில் என்மேல் போர்வையும் பலகை தைத்த ஏந்த இடமாயினும் போதும். இதனால் நாகம்மாள் தன் வரையில் எவ்விதக் கஷ்டமுமில்லாமலே சந்தோஷமாய் நம்மை வரவேற்றுக்கொள்ளலாம்'' என்றார்.

புனிதம்:—"அந்தம்மாள் நமது வரவைச் சந்தோஷமாய்க் கருதுவாளென்று கோருகிறேன்'' என்றாள்.

அம்மொழிகளைக் கேட்ட தைரியநாதர் வியப்படைந்து "அடடா! இந்தப் பெண் என்னதான் நினைக்கிறாள்? ஓ புனிதம்! என் சுற்றத்தாள் தன் இரத்தக் கலப்புடைய சுற்றத்தாரைக் காணச் சந்தோஷமடைய மாட்டாளென்று கருதுகிறாய்? நான் சந்தோஷத்தைப் பூரணமாய்

எதிர்பார்க்கிறேன்; இல்லையில்லை, நீ கருதுவது தவறு. ஒரு சமயம் அவள் வீட்டைவிட்டு வெளியிற் போயிருப்பாள் என்று நான் அச்சப்படுகிறேன். ஏனெனில் அவள் எப்போதும் வெளியில் அலைந்துகொண் டிருப்பவள்.

மீனாள் தன் தந்தையின் மொழிகளைக் கேட்டுப் பெருமூச்சு விட்டாள். அவள் தந்தை அவளை நோக்கி "என் குழந்தாய்! அதற்காகவா வருத்தப்படுகிறாய்? ஏன் உலகில் பாதிபேருடைய குற்றம் அம்மாதிரியே. நீ மட்டும் அதில் சிக்காதிரு" என்றார். மீனாள் மறுபடி பெருமூச்சு விட்டதைக் கண்ட அவள் தந்தை,

"உன் தங்கை நாகம்மாள் விஷயத்தில் பீதி யடைவதைப்போல் நீயும் அடைகிறாய் என்று நான் நம்புகிறேன். அப்படியாயின் அதை வெளிப்படையாகக் கூறிவிடு. நாம் வந்த வழியே, வந்தது போலவே துரிதமாகத் திரும்பிச் செல்லலாம்" என்றார்.

**புனிதம்:**—"அக்கா! பேசாமல் நாம் திரும்பிவிடுவோம். உனக்கு யாவும் நன்றாகத் தெரியும்; நடந்த சங்கதி யாவும் நினைவிருக்கும், நாகம்மாள் உனக்கு எவ்வித மான உதவியும் செய்யமுடியாது என்பதைப்பற்றி நீ நன்றாக அறிந்தே யிருக்கவேண்டும்" என்றாள்.

**மீனாள்:**—"நீ கூறுவது பூரணமாய் உண்மையே. ஆனால் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவள் என் ஒரு கேள்விக்கு விடையளிக்கலாகும். அக்கேள்வியோ மிக்க நிர்ப்பாக்கியசாலியாகிய ஒருவரே இன்னொரு நிர்ப்பாக்கியசாலியைக் கேட்கலாகும்" என்றாள்.

தைரியநாதம்பிள்ளை "இல்லையில்லை. என் சுற்றத்தாள் அப்படிப்பட்டவளல்ல" என்றார். அவர் மீனாள் வார்த்தைகளின் முதற்பாகத்தை மட்டுமே கேட்டார். ஆகையால் தவறாகக் கருதிக்கொண்டு "என் சுற்றத்தாள் லோபி

யல்ல. அவளுக்கு இங்கும் ஆரல் தீவிலும் நல்ல வருமானம் வருகிறது. ஏழைகள் அதில் நல்ல பாகம் பெறுகிறார்கள். அவ்விஷயத்தில் பொறுமைப் படுகிறவர்கள் அவமானமே யடைவார்கள். ஏழைகளுக்குதவியது போக மீதியை அவள் தன் பிரயாணங்களில் எப்படியோ செலவழிக்கிறாள். அதன் விவரம் எனக்குத் தெரியாது. நீங்கள் அவள் வீட்டையும், அவள் கிளியே என்று அழைக்கும் சம்புவையும் பார்த்தால் நகைப்பீர்கள். அனேகர் சம்பு ஒரு பேய் என்று கருதுகிறார்கள். ஆனால் அவ்வுருவம் நம் போல் மாமிசமும் இரத்தமும் கலந்த உருவமே. சம்புவின் தந்தை கீரனூரில் வசித்துக்கொண் டிருந்தது எனக்குத் தெரியும். நான் சம்புவை மறுபடி பார்க்க மிக்க சந்தோஷமடைவேன்'' என்றார்.

புனிதம் தன் தமக்கையைவிட ஆலோசனையில் அதிக புத்தியுடையவள். ஆதலின் தன் தந்தை மேல் கண்ட விஷயங்களைக் கூறிக்கொண்டிருக்கையில் தான் "இப்போது நாம் போய் நாகம்மாளைக் காண்பதால், நமது தமக்கையின் தேகசுகத்திற்கு என்ன நன்மை யுண்டாகும்'' என்று சிந்திக்கத் தொடங்கினாள். கடைசியில் பிரயாணத்தில் முதலில் சந்தர்ப்பம் நேரிடும்போது, இவ்விஷயத்தைப்பற்றி நமது தந்தையிடம் இரகசியமாகக் கலந்து பேசவேண்டும் என்று தனக்குள் தீர்மானம் செய்து கொண்டாள். முன்பு ஒருநாள் இரவு தானும் தன் தமக்கையும் நாகம்மாளைக் கண்டு பேசிய விஷயத்தைத் தன் தந்தையிடம் கூற வேண்டும் என்று அவள் தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். மீனாளுடைய அசௌக்கியத்திற்குண்டாகிய காரணங்களில் அந்த இரவு நடந்த சம்பவமும் ஒன்றென்று அவள் கருதினாள். இவையாவும் தன் தந்தைக்கு விளம்பி

இத்தகைய நிலைமையில் தன் தமக்கை நாகம்மாளைச் சந்தித்தால் அவளுடைய மனக்கலக்கமும் திகிலும் அதிகமாகுமா, குறையுமா என்பதைப்பற்றி தன் தந்தையையே சிந்திக்கச் செய்யவேண்டுமென்று கருதினுள். ஏனெனில் இப்போது அவளை நாகம்மாளிடம் அழைத்துச் செல்வது நலமா என்பதை யவரே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்பது அவள் எண்ணம்.

புனிதம் அவ்விதத் தீர்மானத்திற்கு வந்ததும், அதே சமயம் அவள் தந்தை கடைசியாகத் தாம் அருந்தும் சாராயத்தை யருந்திவிட்டுப் பிரயாணத்தைத் தொடங்க எல்லாம் ஆயத்தமாகட்டும் என்று கட்டளையிட்டார். பிரயாணத்திற்குக் குதிரைகளெல்லாம் சேணம் கட்டப்படும் போது புனிதம் தான் ஏதோ தன் தந்தையிடம் இரகசியமாய்ப் பேசவேண்டும் என்று அவருக்குச் சமிக்கையாய் அறிவித்தாள். தைரியநாதம்பிள்ளை தாம் இரகசியமென்று கருதியதை ஆழ்ந்த கிணற்றில் போட்ட கல்போல மிக்க மறைவான இரகசியமாகவே கருதி நடப்பார். ஆனல் தாம் இரகசியம் மர்மம் என்று கருதாத ஒன்றை, மற்றவர்கள் எவ்வளவு பரம இரகசியமாகக் கருதினும் தமது வேலைக்காரரின் முன்கூடத் தாராளமாக விவகரிக்கும் குணமுடையவர்.

இரகசியம் என்பது ஒரு அதிசயமான விஷயமே. ஒருவர் இரகசியம் என்பது இன்னொருவர்க்கு இரகசியமாகத்தோன்றுது. ஒருவர் ஒரு காலத்தில் இரகசியம் என்று கருதிய ஒரு சங்கதி அவர்களுக்கே மற்ருெரு வேளையில் இரகசியமாகத் தோன்றுது. ஒருவன் தன் சங்கதியை இரகசியமென்று தன் மனதிலேயே வைத்துக் கொண்டிருக்கு மட்டுமே யது இரகசியம். தன் பிராண சினேகனிடம்கூட அதைக் கூறிவிட்டானே அதன் பிறகு அது இரகசியம் என்ற பெயருக்குரியதல்ல.

## 41-வது அத்தியாயம்.

தைரியநாதம் பிள்ளையும் மற்றவர்களும் தாங்கள் தங்கிய விடத்தினின்றும் பிரயாணத்தைத் தொடங்கியபோது, தைரியநாதாம் பிள்ளையும் புனிதமும் மற்றவர்களுக்கு முன்பு வார்த்தையாடிக்கொண்டே சென்ருர்கள். அப்போது, புனிதவதி பிச்சிமலை நாகம்மாள் அன்றிரவு தங்களிடம் வந்து பேசிய சங்கதிகள் யாவையும் விவாரமாய்க் கூறினுள். தைரியநாதம் பிள்ளை நெடுநேரம் வரையில் தம் புதல்வி கூறியவற்றையெல்லாம் "உம் உம்" என்று கேட்டுக்கொண்டேயிருந்து கடைசியில் அத்தகைய பயங்கரமான சந்திகளைத் தம் புத்திரிகளிடம் கூறியதற்காகத் தம் சுற்றத்தாளாகிய நாகம்மாளைச் சபித்து வைதார். அவள் அத்தகைய சங்கதிகளைத் தம் புத்திரிகளிடம் கூறியது பைத்தியக்காரத்தனத்தினும் மிக்க மூடத்தனம் என்று வைதார்.

கடைசியில் தம் புதல்வியை நோக்கி "அவள் மிக்க புத்திசாலியாயினும், சிதோஷ்ண ஸ்திதியைப்பற்றிய ஞானம் அவளுக்கு எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருப்பினும், காற்று மழை முதலியவற்றைப்பற்றி அவள் குறி சொல்வதுபோல் எவ்வளவு திட்டமாகக் கூறினுலும் அவள் பைத்தியக்காரியேயென்று நான் நினைத்திருந்தேன். இப்போது நான் அதைப் பூரணமாக நம்புகிறேன். நான் இப்போது சுங்கானையும் திசையறி கருவியையும் இழந்த ஒரு மாலுமி எப்படித் தன் கப்பலைச் செலுத்தமுடியாமல் திகைப்பானே அவ்வாறே இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் எப்படி நடப்பதென்று அறியக்கூடாதவனுகவிருக்கிறேன். இப்போது நீ கூறிய சங்கதி நாம் வீட்டிலிருக்கும்போதே, புறப்படுமுன்பே தெரிந்திருந்தால் பெரும்

பாலும் நான் புறப்பட்டு வந்திருக்கவே மாட்டேன். இப்போது நாம் இவ்வளவு தூரம் வந்துவிட்டபின், நாகம்மாளும் நமது வரவை யெதிர்பார்க்கும் வரையில்....'' என்றதே,

புனிதவதி "என்ன அப்பா! நமது வரவை யெதிர்பார்க்கிருளா? அதெப்பட்டியப்பா எதிர் பார்ப்பாள் ?'' என்ருள்.

தைரியநாதர்:—"அதெப்படியோ எனக்குத் தெரியாது. காற்று எந்தத் திக்கில் வீசப்போகிறதென்பதை யறிந்துகொள்ளும் சக்தியுடையவள் நாம் என்ன உத்தேசமாக எந்தத் திக்கில் செல்கிறோம் என்பதை யறிவது ஒரு பெரிய காரியமல்ல வென்றே கருதுகிறேன். அவளுக்குக் கோபமுண்டாகுமாறு செய்யலாகாது. நான் அந்த முருகப்பன் விஷயமாக அவளுக்கு வருத்தமுண்டாகும்படி பேசியதால் அவள் பெரும்பாலும் என் குடும்பத்திற்கு இத்துன்பத்தை யுண்டாக்கியிருக்கலாகும். அப்படி யிருந்தால் அதை யவள் மறுபடி திருப்பிவிடக்கூடும். அப்படியே யவள் செய்யும்படி செய்வேன். இன்றேல் அதற்குக் காரணம் இன்னதென்றுவது நான் அறிந்துகொள்வேன். எதற்கும் முதலில் நல்ல வார்த்தைகளாலேயே காரியத்தை முடிக்கப் பார்ப்பேன்'' என்று கூறினர். அவர் யாவும் சாந்தமாகவே மொழிந்தார்.

தன் தந்தை கூறிய யாவும் கேட்ட புனிதம் அவர் பிரயாணத்தைத் தொடங்கிப்போய் நாகம்மாளைக் கண்டு பேசவே தீர்மானித்திருக்கிறூர் என்பதை யுணர்ந்தாள். ஆதலின் அதைத்தடுக்க முயல்வதில் பயனில்லையென்று தெரிந்து கொண்டாள். ஆயினும் அன்றிரவு நாகம்மாள்

தனது சரித்திரத்தைப்பற்றிக் கூறிய கதையில் உண்மைக்கு ஆதாரம் ஏதேனுமுளதோ வென்று அறியக் கருதினள்.

அதனால் துணிகரமாய்த் தன் தந்தையிடம் அதைப் பற்றிக் கேட்டாள். அவள் கேள்வியைக் கேட்ட தைரிய நாதம் பிள்ளை துயரத்தோடு பெருமூச்சுவிட்டு, நாகம்மாள் ஒரு புதுமனிதன்மேல் காதல்கொண்டதும், அவள் தந்தை யிறந்ததற்கு இவளே தன்னை யறியாமல் காரணமாக விருந்ததும் ஆகிய அச்சங்கதிகள் யாவும் கோரமான உண் மையே யென்றும், ஆயினும் அவளுக்குப் பிறந்த குழந்தை யென்ன கதியாயிற்றென்று கண்டறிய தான் என்னமுயற்சி செய்தும் முடியவில்லை யென்றும் கூறினார்.

புனிதவதி மிக்க வியப்படைந்து "என்ன! அவள் குழந்தையா? அதைப்பற்றி அவள் ஒன்றுமே கூறவில் லையே" என்றாள்.

தைரியநாதம் பிள்ளை "அடடா! நாம் பதற்றமாய்ப் பேசிவிட்டோம்" என் றறிந்துகொண்டு வருத்தத்தோடு, "அப்படியாயின் என் நாவைக் கத்திரித்துவிடவேண்டும். நான் அதைப்பற்றி யுன்னிடம் பிரஸ்தாபித்தது பெரும் பிழை. ஒருமனிதன் வாலிபனாயினும் வயோதிகனாயினும் மாதர்களாகிய உங்களிடம் எந்த இரகசியத்தையும் வெளி யிடாமல் மறைத்து வைத்திருக்க முடியாது" என்றார்.

**புனிதம்:**—"அப்பா! அக்குழந்தை? அதைப்பற்றி என்ன நடந்தது? அது என்னவாயிற்று?" என்றாள்.

**தைரியநாதர்:**—"அக் கள்ளப்பயலாகிய வரதராஜன் தூக் கிக்கொண்டுபோய் விட்டான் என்றே கருதுகிறேன்." என்று மிக்க மனச்சோர்வோடு கூறினார். அவர் பேசியமாதிரியால் அச்சங்கதியைப் பற்றிப் பேச அவருக்கு மிக்க மனவருத்தமாக விருந்ததென்று தெரிந்தது.

புனிதம்:—"வரதராஜா? அவன்றான் பாபம் அந்த நாகம்மாளைத் துரோகம் செய்த கள்ளக்காதலன் என்று நினைக்கிறேன். எனப்பா? அவன் எப்படிப்பட்ட மனிதன்?" என்றாள்.

தைரியநாதர்:—என் பெரும்பாலும் மற்ற ஆட்களைப்போல் தானிருப்பான். நான் அவனை யிதுவரையில் பார்த்த தேயில்லை. அவன் குறுக்குத் தீவிலிருந்த மலை நாட்டுக் குடும்பங்களோடு சினேகமாக விருந்தான். நான் வடநாட்டுக் குடும்பங்களோடு சினேகமாயிருந்தேன். ஹா! நாகம்மாள் மட்டும் எப்போதும் தன் சுற்றத்தாரோடேயே யிருந்திருந்தால், அம் மலை நாட்டு ஆட்களோடு சகவாசம் செய்யாதிருந்தால் அவள் இந்த வரதராஜைக் கண்டேயிருக்கமாட்டாள். அப்போது அவள் விவகாரங்கள் வேறுவிதமாக இருந்திருக்கும். விஷயங்கள் மட்டும் அம்மாதிரி நேர்ந்திருந்தால் நான் உங்கள் தாயாரைப்பார்த்தே யிருக்கமாட்டேன். அதனால் உண்டான அற்பகாலச் சுகமும், நீங்காத்துயரமும் நேர்ந்திராது" என்றார்.

புனிதம்:—"நான் நாகம்மாளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறவரையில் அவள் என் தாய்க்குப் பதிலாய் தங்களுக்கு வாழ்க்கைத் துணைவயாய் இருந்திருக்கமாட்டாள் என்றே கருதுகிறேன்." என்றாள்.

தன் காலஞ்சென்ற மனைவியை நினைந்துகொண்டதே தைரியநாதம் பிள்ளையின் மனம் இளகிவிட்டபடியால் அவர் புனிதம் எதிர்பார்த்ததைவிட அதிகமான செல்லத்தோடு அவளுக்கு விடையளிக்கத் தொடங்கி,

"அச்சமயம் நாகம்மாளை மணம் புரிவதோடு நான் திருப்தியடைந்தே யிருப்பேன். நான் அவளை மணந்து கொண்டிருந்தால் எங்களுக்குள்ளிருந்த ஒரு புராதன

மனஸ்தாபம் ஒழிந்து போயிருக்கும். என் சுற்றத்தாரனை வரும் இவளையே மணம்புரிந்து கொள்ளும்படி விரும்பினர்கள். அப்போது உங்கள் தாயாரைப்பற்றி எனக்கொன்றும் தெரியாதாகையால் நான் அவர்களுக்கு மறுத்துக்கூற முடியவில்லை. நானும் நாகம்மாளும் இப்போதிருக்கும் நிலைமையைக் கண்டு நீ எங்கள்மேல் ஒருவித அபிப்பிராயமும் கொள்ளலாகாது. அக்காலத்தில் நாகம்மாள் மிக்க வசீகரமான அழகுடையவளாக விருந்தாள். நானும் உலக அனுபவ மறியாத வாலிபனுய் எதையும் சட்டை செய்யாத அலட்சிய குணமுடையவனு யிருந்தேன். ஆனல் நாகம்மாள் எக்காரணத்திற்காகவோ இந்த வரதராஜென் பவன்மேல் விருப்பம் கொண்டாள். ஆயினும் இவ்விஷயத்தில் அவள் எனக்குச் செய்தது அவள் எனக்குச் செய்யக் கூடிய பெரிய அன்பார்ந்த காரியமாகும்" என்றுர்.

புனிதம்:—"அய்யோ பரிதாபமான நமது சுற்றத்தாள்! எனப்பா! அவளுக்குத் தெய்வீகத்தன்மையான அதிக வல்லமையிருக்கிற தென்பதைத் தாங்கள் நம்புகிறீர்களா?" என்றுள்.

தைரியநாதர்:—"என் முன்னேர்கள் நம்பிய விவகாரங்களை நானும் நம்புகிறேன். இக்காலத்தில் சில அதிகப்பிரசங்கிகள் கருதுவதுபோல் நம் முன்னேரிலும் நாம் புத்திசாலியென்று நான் எண்ணுவதில்லை. இலௌகிகத்தில் மிக்க மனவியாகூலம் உண்டாயில் அதற்காகத் துன்பப்படுவோர்க்குப் பகவான் எதிர்காலத்தில் நடக்கப்போகும் விஷயங்களை யறிவிப்பார் என்று நமது மூதாதைகள் நம்பினர்கள். பாபம் நாகம்மாள் தன் வாழ்நாளில் மிக்க துன்பத்தை யனுபவித்திருக்கிருள். புனிதம்! நீ யுன் மூதாதைகளைக் காட்டிலும் புத்திசாலியாய்விட வெண்ணுகிருயோ?

உன் தமக்கை மீனாள் அசௌக்கியமாக விருப்பதன் முன் நமது நாட்டுப் பாஷையிலிருந்த எல்லாவிஷயங் களிலும் பக்தியும் நம்பிக்கையும் வைத்திருந்தாள்'' என்றார்.

**புனிதம்.**—''பாபம்! நமது சுற்றத்தாள் மிக்க பரிதாப மானவளே. அவள் குழந்தை கண்டு பிடிக்கப்படவே யில்லையோ?'' என்றாள்.

**தந்தை:**—''அவள் குழந்தையைப்பற்றி எனக்கென்ன தெரியும்? அக்குழந்தை பிறக்கு முன்னும் பிறந்த பின்னும் அவள் வியாதியுற்றிருந்தாள். நாங்கள் அவளைச் சங்கீதத்தாலும், சந்தோஷமான சங்கதிகளாலும் துயரமில்லாமல் வைத்துக்கொண்டிருக்க முயன்றோம். அக்குழந்தை காலத்திற்கு முன்பே பிறந்து விட்டது. அதனால் அது முன்னமே இறந்து போயிருக்கலாகும். இதைப்பற்றிய சங்கதிகளுனக்கொன்றுமே தெரியாது. ஆகையால் நல்ல பெண்ணைப்போல் உனக்குத் தகாத விஷயங்களைப்பற்றி யொன்றும் கேட்க விரும்பாதே'' என்று கூறிக்கொண்டே தன் குதிரையைத் தட்டித் துரிதமாக விட்டு முன்னே செல்லும் மீனாளருகிற்போய்ச் சேர்ந்தார். இதனால் அவர் புனிதவதியிடம் இரகசியமாகச் சம்பாஷிக்கக் கூடிய சந்தர்ப்பம் தடைப்பட்டு விட்டது.

புனிதவதிக்கு அதனால் மனவருத்தமில்லை. அவள் வியாகூலமனைத்தும் தன் தமக்கையைப்பற்றியே. தன் தமக்கையின் வியாதி மனதைப் பற்றியதாகவே யிருப்பதாகத் தோன்றுவதால், நாகம்மாளைக் காண்பதால் அது பெரும்பாலும் அனுகூலமாகவே முடியும் என்று தனக்குள் கருதிக் கொண்டாள்.

இதுகாறும் அவர்கள் மிக்க பயங்கரமான பொய்

மண்ணுடைய சதுப்பு நிலங்களின் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் ஒவ்வொரு சமயம் நேராகச் சென்றால் ஒரு மைல் தூரமேயுள்ள விடத்திற்கு மூன்று நான்கு மைல்கள் சுற்றிக்கொண்டு போகவேண்டியிருந்தது. அப்படிச் செல்லாமல் கொஞ்சம் மூடத்தனமாய் அவசரத் தால் இச்சதுப்பு நிலங்களின் வழியாக நேரே சென்றாலோ குதிரை ஆள் யாவரும் அப்படியே கழுத்து வரையில் பூமி யில் புதைந்து மடிய வேண்டியதே.

அதனால் ஜாக்கிரதையோடு ஆனால் ஆலசியத்தோடு அந்த அபாயகரமான பூமியைக்கடந்து கடைசியில் பாறை களுக் கிடையிலுள்ள கெட்டிப் பூமியில் பிரவேசித்ததும் தைரியநாதம் பிள்ளை தமது மக்களை நோக்கி "பெண்காள்! நமது யாத்திரையின் அபாயமான பாகத்தைக் கடந்து விட்டோம். இனி நமது சுற்றத்தாளின் உறைவிடம் சமீ பத்திலேயேதானிருக்கவேண்டும். அவள் எத்தகையவிடத் தில் வசிக்கிறாளென்பது உங்களுக்கு இனி விளங்கும்" என்றார்.

சுமார் அரைமணிநேரம் பிரயாணம் செய்தபின் அவர் "ஆ அதோ தூரத்தில் நாகம்மாளின் வாசஸ்தலம் தெரிகிறது. இத்தகைய வாசஸ்தலத்தை நீங்கள் எப்போ தேனும் பார்த்திருக்கிறீர்களா?" என்றார்.

அந்த இடம் ஒரு செங்குத்தான பாறையின் உச்சியில் கட்டப்பட்டிருந்தது. கட்டப்பட்டிருந்ததெனின் அது இக்காலத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களைப்போன்ற தென்று கருதலாகாது. அந்த நாட்டில் முற்காலத்தில் இவர்கள் முன்னோர்கள் மலையிலுள்ள குகைகளிலும் பொந்துகளிலும் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர் களில் பலசாலிகளாயிருந்தோர் ஜனக்கூட்டங்களின் தலை வர்களாக விருந்தார்கள். அத்தலைவர்கள் அத்தகைய

இரண்டு மூன்று குகைகள் மலைச்சந்துகள் முதலியவற்றை ஒரு கோட்டைபோல் வளைத்துக்கொண்டு அங்கிருந்த விடுதிக் கற்களையும் களிமண், சுட்ட மண்ணாகிய சுண்ணாம்பு முதலியவற்றையும் சேர்த்துச் சுற்றிச் சுவர் எழுப்பிக் கொண்டு காட்டிலுள்ள மரங்களைவெட்டி அவற்றினின்றும் சாளரங்கள், வாயிற்படிகள், அவசியமான விடங்களில் உத்தரங்கள், கம்பங்கள் முதலியவற்றைச் செய்துகொண்டு அந்த விடங்களைப் பாதுகாப்பு ஸ்தலமாகிய கோட்டைகளாகச் செய்து கொண்டார்கள்.

இப்போது நாகம்மாள் வசிக்கும் இடம் முற்காலத்தில் அத்தகைய முரட்டுத் தலைவன் ஒருவனால் கட்டப்பட்ட ஒரு அநாகரீகமான கோட்டையெனலாம். அத் தலைவன் அதில் சில கட்டிடங்களைச் சேர்த்து உள்ளே பூச்சுவேலை செய்து வைத்தான். எவ்வளவு செய்திருந்தாலும் அக்கட்டிடம் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அந்த உயரமான கற்குன்றின் ஒரு பாகமாகத்தோன்றியதேயன்றி அங்கு பிரத்யேகமாக ஜனங்களுக்குரிய ஒரு வாசஸ்தலமிருப்பதாகத் தெரியவில்லை

மீனாள் இத்தகைய கட்டிடத்தைக் கண்டிருந்தால் மிக்க வியப்படைந்து ஆவலோடு அதன் விவரங்களைக் கவனித்திருப்பாள். ஆனால் இப்போது அவள் மனம் இருந்த வியாகூலமும் கலக்கமுமான நிலைமையில் அக் கட்டிடத்தைப் பற்றிய விஷயத்தில் அவள் மனம் நாட்டங் கொள்ளவில்லை. ஆயினும் இப்போதும் அந்த விடத்தைக் கண்டதும் அதில் வசிக்கும் தன் சுற்றத்தாளாகிய நாகம்மாளை நினைத்தாள். அவளுடைய அபூர்வ வல்லமைகளனைத்தும் மெய்யாகவே யிருக்கவேண்டுமென்று அவளுக்குள் நம்பகம் உண்டாயிற்று. அவள் தன் தந்தையை நோக்கி,

"நமது சுற்றத்தாள் தனக்குத் தகுதியான வாசஸ் தலத்தையே யமைத்துக்கொண்டிருக்கிறுள். உலகில் முதல் முதல் சுகமான வாழ்க்கையைத் தொடங்குவோம் என்று நம்பி அடியோடு மோசம் செய்யப்பட்டு மனமுடைந்த வர்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் தகுந்த வாசஸ்தலம் இதுவே. இங்கு வானத்தையும் கடற்பட்சிகளையுமே காணலாம்; பயங்கரமான அலையின் சத்தத்தையும் புயற் காற்றின் ஒசையையுமே கேட்கலாம். நமது சுற்றத் தாளுக்கு இது ஒரு கிளிக்கூண்டுபோல் இருக்கிறது" என்றுள்.

புனிதவதிக்கோ தலைநிமிர்ந்து பாறையின் உச்சியி லிருக்கும் வீட்டைக் கண்டதே மனங்கலங்கி பீதியுண்டா யிற்று. பேசாமல் வீட்டிற்கே திரும்பிவிடவேண்டுமென்று நம் தந்தையிடம் கூறலாம் என்று முதலில் சிந்தித்தாள். ஆயினும் மறுபடி யோசனை செய்தாள். இவ்வளவு தூரம் வந்துவிட்டபின் திரும்பிச்செல்ல நமது தந்தை சம்மதிக்க மாட்டார் என்று கருதியே பேசாம லிருந்துவிட்டாள்.

இப்போது நாகம்மாள் இருக்கும் வீடு இவர்களுக்கு எதிரிலுள்ள செங்குத்தான ஒரு பாறையின் உச்சியிலிருக் கிறது. அதன் மூன்று பக்கங்களில் கடல் சூழ்ந்துகொண் டிருக்கிறது. இவர்கள் அங்கிருந்து அப்பாறையைச் சுற் றிக்கொண்டு மேலுக்குச் செல்லும் நெருக்கமான பாதை யின் வழியாகத் தான் செல்லவேண்டும். அப்பாதை இரண்டு குதிரைகள் வரிசையாகச் செல்லப்போதுமான அகலமுடையதல்ல. இவர்கள் அவ்வழியே ஒருவர் பின் ஒருவராகச் செல்லத்தொடங்கினர்கள். தைரியநாதம் பிள்ளை கடைசியில் சென்றுர். வேலையாட்கள் சாமான் குதிரைகளோடு முன்னே சென்றுர்கள். அவர்கள் பின் னல் புனிதவதியும் அவள் பின்னல் மீனுளும் சென்றுர்கள்.

அத்தீவிலுள்ள ஜனங்களுக்குப் பட்சிகள், அவற்றின் முட்டைகள் இவற்றை யெடுப்பதற்காக அத்தகைய பாதைகளில் சென்று சென்று அதிக பழக்கம். மீனுளுக்கும் புனிதவதிக்கும் கூட அதில் நல்லபழக்கமுண்டு. அங்குள்ள குதிரைகளோ மலையாடுகளைப்போல் ஓரடி அகலமுள்ள பாதையில்கூடச் சென்று பழகியிருக்கின்றன.

மேலே போகப்போக ஒருபக்கத்தில் சுமார் மூந்நூறடி ஆழமான பாதாளமே யிருக்கிறது. அதனடியில் கடலலை அப்பாறையில் மோதிக்கொண் டிருப்பதைக் காணப் பயங்கரமா யிருக்கும். அன்னிய நாட்டார், அத்தகைய வழிகளிற் சென்று பழகியிராதவர்கள், அவ்வழியே செல்வதாயின் தலை கிறுகிறுத்துப் பாதாளத்தில் விழுந்து மடிவது நிச்சயம். புனிதம் ஒரு இடத்தில் அச்சிறு பாதையில் செல்லும்போது வழி மிக நெருக்கமானதால் இவள் குதிரையின்மேல் செல்லும்போது இவளுடைய ஒருகால் கீழிருக்கும் பாதாளத்தின்மேல் தொங்கியது. அச்சமயம், அவள் எவ்வளவுதான் அத்தகைய அபாயகரமான பாதைகளில் சென்று பழகியவளாயினும் திப்பிரமை யடைந்து விட்டாள். ஆனல் இரண்டொரு விநாடிகளில் சமாளித்துக் கொண்டாள். வேறு யாரேனுமிருந்தால் பாதாளத்தில் விழுந்து விட்டேயிருப்பார்கள்.

அச்சமயம் புனிதம் தன் தமக்கை அந்த விடத்தை யெப்படித் தாண்டுகிருள் என்று திரும்பிப் பார்த்தாள். மீனுள் அந்த விடத்தில் வந்தபோது தன் கரங்களையும் தேகத்தையும் கூடப் பாதாளத்தின் பக்கமாய் அதிகமாய்ச் சாய்ப்பதைக் கண்டதே புனிதம் அவள் வேணுமென்றே பாதாளத்தில் வீழ்ந்துவிடக் கருதுகிருளென்று நினைத்துப் பெருந்திகிலடைந்து நடுக்கமுற்ருள். அதே சமயம் தைரியநாதர் தன் மூத்த குமாரத்தியை நோக்கி “ ஓ மீனுள்

பத்திரம் பத்திரம் !" என்று உரக்கக்கூவினர். அதற்குள் மீனள் தன் தேகத்தை நிமிர்த்தி நேராய்க் குதிரைமேல் உறுதியாய் உட்கார்ந்து கொண்டாள்.

இவர்கள் அச்சுற்று வழியே சென்று கடைசியில் அப் பாறையின் உச்சியிலுள்ள சிறு வெளியை யடைந்தார்கள். அந்த விடம் பூசந்திபோன்ற பாறை. அதன் முனை கடலை நோக்கியிருக்கிறது. அங்கிருந்த வீட்டின் வெளி வாயிற்படியில் இவர்கள் வந்து சேர்ந்ததும் தைரியநாதம் பிள்ளை அங்கிருந்த ஆட்காரர்களிடம் தங்கள் குதிரைகளை விட்டு "இவற்றின்மேலிருக்கும் சாமான்களை யெடுத்து உள்ளே வைத்துவிட்டுக் குதிரைகளை மேயும்படி விட்டு விடுங்கள்" என்றார். அதன் பிறகு யாவரும் வாயிற்படியை நெருங்கினர்கள். அந்த வாயிற்படி முன்பு ஒரு முரட்டுத் தனமான பாலத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது. ஏனெனில் நாகம்மாள் இருக்கும் வீட்டிற்கும் இப்போது இவர்கள் இருக்குமிடத்திற்கும் இடையிலுள்ள பாதாளம் போன்ற சந்தின்மேல் ஒரு பாலம் கட்டப்பட்டிருந்தது. அப்பாலம் இப்போது இடிந்துபோய் அதற்குப் பதிலாய், ஒரு மரக் கால் நடைப்பாலம் அமைக்கப்பட்டிருந்தது.

இவர்களனைவரும் மெதுவாய் அப்பாலத்தின்மேலேறி வீட்டின் வாயிற்படியருகிற் சென்றார்கள். அங்கு சென்றதும் தைரியநாதம் பிள்ளை கதவைத் தட்டிக்கொண்டே "ஒரு சமயம் என் சுற்றத்தாள் இப்போது வீட்டிலில்லா விடினும் நாம் இரண்டொரு நாட்கள் அவள் வருகைக்காக இங்கு காத்துக் கொண்டிருக்கலாம்" என்றார். அம்மொழிகளைக் கேட்டதே புனிதம் "கடவுளே! நாகம்மாள் வீட்டில் இல்லாமலேயிருக்கவேண்டும். நாம் இரண்டு மூன்று நாட்கள் இங்கு தங்கியிருந்தாலும் அவள் வராமல் போக வேண்டும், நாம் வீட்டிக்குத் திரும்பிவிடவேண்டும்"

என்று எண்ணினள். ஏனெனில் தன் தமக்கை நாகம்மாளைச் சந்தித்து அவளோடு சம்பாஷித்தால் என்ன மனக்கலக்கமடைவாளோவென்று அவளுக்கு மிக்க பீதியாகவேயிருந்தது உண்மையில் நாகம்மாள் விஷயங்களைப்பற்றி மிக்க கலவரமடைகிறவள் புனிதமே. ஆயினும் அவள் களங்கமற்ற உள்ளமுடையவளாதலின் அவள் பீதிக்கும் மீனுளுக்குண்டாகும் பீதிக்கும் மிக்க வித்தியாசமுண்டு.

---

## 42—வது அத்தியாயம்.

தைரியநாதம் பிள்ளை இரண்டு மூன்று முறை கதவைத் தட்டினதும் கதவு தட்டடென்று திறக்கப்பட்டது. ஒரு குட்டையான மனிதன் வாயிற்படியில் வந்து நின்றான். புனிதமும் மீனுளும் அவனைக் கண்டதும் மிக்க வியப்பும் பீதியுமடைந்து இரண்டு மூன்றடிகள் பின்னிடைந்தார்கள். ஏனெனில் அங்கு வந்து நின்றமனிதன் , குட்டையானவன். சுமார் நாலரையடியுயரம் இருப்பான். தட்டையான தடித்து அகன்ற சிரமும் சதுரமான உருவமும் குறுகிய நெற்றியும் தட்டையான நாசியும் குழிவிழுந்த கண்களும் அகன்ற வாயும் தடித்த உதடுகளும் அகன்ற நாசித்துவாரங்களும் உடையவன். அவன் தைரியநாதம் பிள்ளையைக் கண்டதும் புன்னகை புரிந்து ஒருவிதமாய் முகத்தைக் காட்டி அவரிடம் அறிமுகமானவன்போல் பலவிதச் சமிக்கைகள் செய்தான். மீனுளும் புனிதமும் தாங்கள் கதைகளில் வாசித்த பூதங்களின் உருவங்களில் இது ஒன்றாகவே யிருக்கவேண்டுமென்று கருதினார்கள்.

தைரியநாதம் பிள்ளை அவனிடம் சிநேக பாவமாய்ப் பேசத்தொடங்கினர். அவர் அவனிடம் வேலைக்காரனிடம்

பேசுவதுபோல் பேசாமல் தமக்குச் சமமான சினேகிதனிடம் பேசுவதுபோல் பேசினர். ஆயினும் அவருடைய குரலின் சத்தத்தால் அவருடைய வாக்கில் தாம் மேலான அந்தஸ்துடையவரென்ற தொனி தோன்றியது. அவர் அவனை நோக்கி "ஆ! சம்பு! நல்ல சம்புவே! நீ மிக்க நல்லவன். எப்படியிருக்கிறாய். க்ஷேமமாகவும் சந்தோஷமாகவுமிருக்கிறாயா? இதோ இவர்களிருவரும் என் புத்திரிகள். இவள் மூத்தகுமாரி; இவள் பெயர் மீனாள். இவள் இளைய குமாரி; இவள் பெயர் புனிதவதி" என்று கூறிவிட்டுத் தமது புத்திரிகளை நோக்கி "குழந்தைகாள்! இவன் நமது சுற்றத்தாளிடம் இருப்பவனாகிய சம்பு என்பவன். இவனைப் பற்றி நான் உங்களுக்குக் கூறியிருக்கிறேன்" என்றார்.

சம்பு இரண்டு கன்னிகைகளையும் ஒருவித நகையோடு நோக்கித் தலை தாழ்த்தி வந்தனமளித்தான். அவன் வாயால் ஒன்றும் பேசாமலிருப்பதைக் கண்ட கன்னிகைகள் வியப்போடு தமது தந்தையை நோக்கினார்கள். அவர் "சம்பு மிக்க நல்லவன். தலை போவதாயினும் தன் எஜமாட்டியின் சங்கதிகளில் கடுகளவுகூட ஒருவர்க்கும் கூறமாட்டான்" என்றார். அவர் கேலியாய்க் கூறுகிறார் என்பதை யறிந்த சம்பு தன் வாயை அகலத்திறந்து சிரித்தான். அவன் வாய் அகன்றிருந்தாலும் அதற்குள் இருக்கும் நாக்கு மிக்க சிறிதாயிருந்தது. அது ஆகாரத்தைப் புறட்டி யுள்ளே தள்ள மட்டும் உதவுமே யன்றி எவ்விதச் சத்தத்தையும் உச்சரிக்க முடியாதென்று நன்கு விளங்கியது. அவனுடைய நாக்கு யாராலேனும் குரூரச் செய்கையால் அப்படி அறுக்கப்பட்டதென்றும், அல்லது வியாதியால் அப்படி யாயிற்றென்றும் கூறமுடியாது. ஆனால் அது இயற்கையா யுண்டானதல்ல வென்று மட்டும் தெரிகிறது. எப்படியெனில் இயற்கையாய் ஊமையாயின் காது

கேட்காது. இவனுக்குச் செவிப்புலன் குறைவின்றி நன்றாகவே வேலை செய்கிறது. சகோதரிகளிருவரும் அவனுடைய உருவத்தைக் கண்டதால் மிக்க வியப்போடும் பீதியோடும் ஒருவரை யொருவர் நோக்கினார்கள்.

தைரியநாதம் பிள்ளை:—"ஆ! சம்பு நீ பிராந்தி யருந்தி எத்தனை நாட்களாயின. என்னிடம் நேர்த்தியான சரக்குகளிருக்கின்றன" என்று கூறிவிட்டுத் தாம் சமையற்காரனை யழைப்பவர்போல் "அடே" என்றார்.

சம்பு நகைத்துக்கொண்டே பீதியுடையவன்போல் வீட்டின் உட்பக்கம் சுட்டிக்காட்டி ஒரு கரத்தைத் தலையின்மேல் நீட்டிப் பிறகு வாயைப் பொத்திக்கொள்பவன் போல் சமிக்கை செய்தான்.

அவன் சமிக்கையைப் பழக்கத்தாலறிந்த தைரியநாதம் பிள்ளை:—"ஓ! என்ன? என் சுற்றத்தாள் அதற்காக உன்மேல் கோபிப்பாளா? நல்லது, நான் உன்னிடம் ஒரு நல்ல சாராயப் புட்டியை யளிக்கிறேன். நீ யதைப் பத்திரமாய் இரகசியமாய் வைத்துக்கொண்டு உன் எஜமானி வீட்டிலில்லாத காலத்தில் உபயோகப்படுத்திக்கொள்" என்றார்.

சம்பு சந்தோஷத்தோடு தன் இயற்கைப்படி நகைத்தான். அவன் அந்நேரம் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தாலும் வாயிற்படியின் எதிரிலேயே நின்றபடியிருந்தான்.

தைரியநாதம் பிள்ளை அவனைநோக்கி, "சரி இப்போது வழிவிட்டு நில். என் புத்திரிகள் தங்கள் சுற்றத்தாளைக் காணச் செல்லட்டும். அடடா! என் தலையை யசைக்கிறாய். தலையசைக்கவேண்டாம். உன் எஜமானி வீட்டிலிருந்தால் நாங்கள் கட்டாயம் பார்த்தே தீருவோம்" என்றார்.

சம்பு என்ற குள்ள ஊமை மறுபடி சில குறிகளாலும், அறியமுடியாத சில வார்த்தைகளாலும் அது முடியாத காரியம் என்று அறிவித்தான்.

தைரியநாதர் "அடே! உனது முட்டாள் தனத்தால் எனக்கு வீண்தொந்தரை கொடுக்காதே. பேசாமல் வழி விட்டு எட்டநில். நாங்கள் உள்ளே செல்லவிடு. அப்படி ஏதேனும் குற்றமுண்டாவதாயின் அது என்னுடைய குற்றமாகவே யிருக்கட்டும்." என்று கூறிக்கொண்டே சம்புவின் சட்டைக் கழுத்துப் பட்டையைப் பற்றிக் கொண்டு முரட்டுத்தன மின்றி அவனை வாயிற்படியை விட்டு அப்புறம் ஒரு பக்கமாய் இழுத்துத் தள்ளிவிட்டுத் தமது புத்திரிகளை யிட்டுக்கொண்டு உள்ளே சென்றார். அங்கு நடந்த சம்பவங்களைக் கண்ட இரண்டு கன்னிகைகளும் பீதியடைந்து தங்கள் தந்தையின் அருகிலேயே சென்றார்கள்.

இவர்கள் செல்லும் நெருக்கமான வளைந்த வழியில் சுவரில் ஒரு துவாரம் மட்டுமே யிருந்தது. அவ்வழியாகத் தான் வெளிச்சமும் காற்றும் வரவேண்டும். பூர்வீகத்தில் அது எதிரிகள், கள்ளர் முதலியவர்கள் வரின் அவர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்காக அமைக்கப் பட்டதாயிருக்கவேண்டும் என்று தைரியநாதர் கருதினர். இவர்கள் படிகளின் வழியாக நிதானமாய் ஏறிச் செல்லும் போது திடீலென்று வெளிச்சம் போய் மங்கலான இருள் சூழ்ந்துகொண்டது. என்னகாரணமென்று புனிதவதி உடனே நிமிர்ந்து பார்த்தபோது அத்துவாரத்தில் மேலே நின்று இவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் நாகம் மாளின் வெளுத்த முகம் புலப்படுவதைக் கண்டாள். அவள் திடுக்கிட்டுவிட்டாள். வீட்டிற்குச் சொந்தக்காரி,

யார் இப்படி அறிவிக்காமலே நம் வீட்டிற்குள் வருகிறவரென்று பார்ப்பது ஒரு அதிசயமல்ல. ஆனால் அந்த மங்கலான வெளிச்சத்தில் அவள் முகம் வெளுத்துத் தோன்றுவதும், அவள் முகத்தில் தோன்றும் ஒருவித கடினப்பார்வையும், அப்பார்வையில் மரியாதையாவது அன்பாவது இல்லாமாலிருப்பதும், அவளுடைய மௌனமான நிலைமையும், அந்த விடத்திலுள்ள மற்றத்தோற்றங்களும் காண்போர் பீதியை யதிகரிக்கத் தக்கவைகளாக விருந்தன.

தைரியநாதம் பிள்ளையும் மீனளும் மேல் நோக்காமலே மெதுவாய் ஏறிச்சென்றார்கள். சற்றுதூரம் சென்றபோது வழி இரண்டாகப் பிரிந்தது. தைரியநாதர் வலது பக்கம் இருக்கும் படிகளின் வழியாய் ஏறத்தொடங்கி "ஆ நான் மறந்து போயிராவிடின் இந்தப் படிகள் தான் சரியான பாதையாக விருக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே நான் கைந்து படிகள் ஏறியதும் நிமிர்ந்து நோக்கி "ஆ அதோ உட்கார்ந்துகொண் டிருக்கிறாள்" என்றார். மேலே யுள்ள அறையில் நாகம்மாள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அந்த அறையின் கதவு பாதிதான் திறந்திருந்தது.

தைரியநாதம் பிள்ளையும் இரண்டு கன்னிகைகளும் மேலேறி அந்த அறைக்குள் சென்றார்கள். அதில் பூரண வெளிச்சமில்லை. அந்த அறையில் பல பாஷைகளிலுள்ள அனேகம் புத்தகங்களும், கடிதங்களில் எழுதப்பட்ட சுருள்களும் ஏகமாக விருந்தன. அவையன்றித் தடித்த கடிதங்கள் பலவிதமான சக்கரங்கள் வரைந்து அவற்றில் ஒருவித அபூர்வமான அக்ஷரங்கள் வரையப்பட்டிருந்தன. சாதாரண பாமரஜனங்கள் அவற்றைக் கண்டால் பேய் வசியம் செய்வதற்கான கருவிகள் என்றே கருதுவார்கள்.

ஒரு மூலையில் முரட்டுத்தனமாக வேலை செய்யப்பட்ட ஒரு கவசம் தொங்கிக்கொண்டிருந்தது. அக்கவசத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு ஈட்டி, கேடையம், சண்டரகோடரி யும்கூட விருந்தன. அங்கிருந்த ஒரு அலமாரியில் கல்லி ஞற் செய்யப்பட்ட பலவித ஆயுதங்கள் ஏகமாய் இருந்தன. அவற்ருேடு அத்தீவிலுள்ள பளிங்குபோன்ற ஒருவிதமான பச்சைக் கல்லால் செய்யப்பட்ட கத்திகள் ஈட்டிகள் முத லியவைகளுமிருந்தன. அத்தீவிலுள்ளவர்கள் அக்கல்லை யொருவித இரக்ஷையாகக் கருதுவது வழக்கம். ஒரு மூலை யில் ஒருவிதக் கடற்பாசியின்மேல் ஒரு ஜெந்து படுத்திருந் தது. திடீலென்று பார்த்தபோது அது ஒருவித நாய் போல் காணப்பட்டது. தைரியநாதம் பிள்ளை யதனருகிற் சென்று குனிந்து பார்த்துவிட்டு "ஒகோ! இது ஜலசரம். நமது சுற்றத்தாள் இதைத் தனக்குத் துணையாக வளர்த்துக் கொண்டிருக்கிருள் போலும். நல்லதுணைகள்—சம்பு ஒரு துணை—இது ஒரு துணை" என்ருர்.

ஒரு கல்லால் செய்யப்பட்ட மேஜையினெதிரில் உட் கார்ந்துகொண்டிருந்த நாகம்மாள் கையில் ஒரு புத்த கத்தை வைத்து வாசித்துக்கொண்டிருந்தாள். இவர்கள் உள்ளே வந்ததை யவள் பார்த்தாளே யொழிய வாய் திறந்து பேசவில்லை. சாதாரணமாய் சுற்றத்தார் திடீ லென்று வீட்டிற்கு வந்தால் அவர்களைக் கண்டவுடனே வீட்டிலிருப்பவர்களின் முகத்தில் மலர்ச்சி யுண்டாவது இயற்கை. அதோடு சந்தோஷத்தோடு நல்வரவு கூறுவதும் இயற்கை. அதுமட்டுமல்ல. அப்படிச் செய்யவேண்டியதே கடமை. ஆனல் நாகம்மாளோ சற்றும் உட்கார்ந்த விடத்தைவிட் டசையவேயில்லை. கையிலிருந்த புத்தகத் தைக் கீழேவைக்கவுமில்லை. அவள் முகத்தில் மலர்ச்சியா வது எவ்வித மாறுதலாவது உண்டாகவுமில்லை.

186518
சென்னை-600 009

கடைசியில் தைரியநாதரே தன் சுற்றத்தாளை நோக்கி "ஓகோ நாகம்மா! நீ சுகமாகவே யிருக்கிருயென்று தெரிகிறது. நானும் என் புத்திரிகளாகிய மீனுளும் புனிதவதியும் உன்னைக் காண்பதற்காகவே நெடுந்தூரம் பிரயாணம் செய்து வந்தோம்" என்ருர். நாகம்மாள் ஒருபதிலும் கூறவில்லை. அதன்மேல் அவர் மீனுளை நோக்கி "குழந்தாய்! நமது சுற்றத்தாள் இங்கிருந்தபடி எப்போதும் சந்தோஷகரமான காட்சிகளையே காணலாம். இதோ பார் இங்கிருந்து அரைக்கால் மைல் தூரத்திற்குள் அகன்ற கடலின் குளிர்ச்சியான காட்சி கண்களுக்கு எவ்வளவு அழகாயிருக்கிறது பார்" என்ருர். அச்சமயம் நாகம்மாள் புஸ்தகத்தின் மேலிருந்த நாட்டத்தையிவர்கள்மேல் நாட்டினுள். தைரியநாதர் "என்ன நாகம்மா! கடையில் எங்களுக்கு நல்வரவளிக்கப் போகிருயோ இல்லையோ? அல்லது நாங்கள் எங்கள் இரத்தக் கலப்பான சுற்றத்தாளை விட்டு அன்னியர் உதவியைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டுமா. அதிலும் இத்தகைய மாலைப்போதில் போக வேண்டுமா ?" என்ருர்.

அதன்மேல் நாகம்மாள் "அட கல்மனமும் மந்த மதியுமுடைய சந்ததிகளே! பொல்லார், நல்லோர் சொல்லும் புத்தியை வலது செவியிற் கேட்டு இடது செவியில் விட்டுவிடுவது போன்ற புத்தியுடையோரே! நீங்கள் என்னிடம் ஏன் வந்தீர்கள்? தீங்கு வரப்போகிறதென்று நான் சமயத்தில் முன்னுடிச்செய்த எச்சரிக்கைகளை யெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு, இப்போது தீங்கின் காற்று மேலே தாக்கியபோது. என் புத்திமதி யுங்களுக்குப் பயன் படக்கூடாத சமயத்தில் என்னைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்" என்ருள்.

தைரியநாதம் பிள்ளை தமது இயற்கையான உறுதி

[stamp]

போடும், களங்கமற்ற மனதோடும் அவளை நோக்கி "நீ செய்யும் உபசாரம் அன்பில்லாததாயும் முரட்டுத்தனமான தாயு மிருக்கிறது. நீ கூறும் குணங்கள் என்னிடமாவது என் புத்திரிகளிடமாவது கிடையா. நாம் பழைய நட்புடையவர்கள். அதற்காகவும் வேறு சில காரணங்களுக்காகவும் நான் உடனே யுன் வீட்டைவிட்டுப் போய்விடமாட்டேன். நான் இங்கு அன்போடும் மரியாதையோடுமே வந்தபடியால், நீயும் அப்படியே நடந்துகொள்ளவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படிக்கின்றேல் நாங்கள் உன் வீட்டைவிட்டு உடனே சென்று விடுகிறோம். அதனாலுண்டாகும் அவமானம் உன் வீட்டின்மேலேயே விழட்டும்" என்றார்.

நாகம்மாள் கோபமடைந்து, "நீ முதற்கொண்டு எல்லா மனிதர்களும் ஆலோசனையும் புத்திமதிகளும் உதவியும் கேட்கவரும் ஒரு வீட்டைப்பற்றி நீ இத்தகைய மொழிகளை யெப்படித் தைரியத்தோடு கூறுகிறாய்? காற்றும் மழையும் அலையும் யாருடைய கட்டளைக்கு அச்சப்படுகின்றனவோ அப்படிப்பட்டவளிடம் பேசுவோர் அடக்கமாகவே பேசவேண்டும்" என்றாள்.

தைரியநாதர் தமது பெயருக்குத் தக்கபடி தைரியத்தோடு, "அலையும் காற்றும் மழையும் தங்களுக்குப் பிரியமாயின் அடங்கிவிடலாகும். நான் என் சுற்றத்தாள் வீட்டில், என் பழைய நண்பர் வீட்டில் இருக்கிற வரையில் சற்றும் பயமின்றியே பேசுவேன் என்பதில் ஐயமில்லை" என்றார்.

நாகம்மாள்:—"இத்தகைய முரட்டுத்தனத்தால் உன் கேள்விகளுக்கு விடையளிக்குமாறு என்னைக் கட்டாயப்படுத்தலாமென்று கருதுகிறாயோ?" என்றாள்.

தைரியநாதர் "நாகம்மாள்! உன்னைப்போல் நமது

வடநாட்டு பழைய மர்மங்கள் எனக்குத் தெரியாது. ஆனல் முன்னேர்கள் இத்தீவுகளில் வாசஸ்தலங்கள் தேடிக்கொள்ள இங்கு வந்தபோது, தங்கள் புயங்களோடும் கோடரிகளோடும் தங்கள் வாட்களோடுமே இங்கு வந்தார்கள். அவற்றைக்கொண்டே தாங்கள் அடைய வேண்டியதைப் பலவந்தத்தால் அடைந்தார்கள்'' என்ருர்.

நாகம்மாள் தன் ஆசனத்தை விட்டெழுந்து முன்னேக்கிவந்து " நீ உனக்கும் உன் புத்திரிகளுக்கும் நற்காலமாய் நீ நன்ருகக்கூறிஞய். நீமட்டும் என்னிடமிருந்து ஒரு விடையும் பெருமல் போய் விட்டிருந்தால், நாளைக்காலைச் சூரியனை நீ காணப்போகிறதேயில்லை. எனக்கு ஊழியம் செய்யும் ஆவேசங்கள் மிக்க கோபமுடையவை ; அவை மனித வர்க்கத்திற்கு அனுகூலமான காரியத்தைச் செய்ய மாட்டா. மிக்க தைரியமும் துணிகரமுமான ஒருவரால் கட்டளையிடப்பட்டால்தான் அப்படிச் செய்யும். இப்போது என்னல் உனக்காக வேண்டியதென்ன வென்பதைக் கூறு'' என்ருள்.

தைரியநாதர்:—என் புத்திரியின் தேகசுகம் மிக்க அதிருப்தியாயிருக்கிறது. எந்த சிகிச்சையாலும் அனுகூலப்படவில்லை.

நாகம்மாள்:—உன்புத்திரியின் அசௌக்கியமா? அவளுக்கென்னவியாதி?

தைரியநாதம் பிள்ளை:—"வியாதி யின்னதென்பதை நோயாளியைச் சோதித்து வைத்தியரே கூறவேண்டும். நான் கூறக்கூடியதெல்லாம் கூடி....'' என்றதே,

நாகம்மாள்:—"போதும். பேசாமலிரு. நீ என்ன கூறப் போகிருய் என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். உனக்குத் தெரிந்திருப்பதைவிட அதைப்பற்றி யெனக்கு அதிமாகத் தெரியும். நீங்களெல்லாரும் உட்காருங்

கள்" என்று கூறியபின் மீனுளை நோக்கி, "குழந்தாய்! நீ அந்த நாற்காலியின்மேல் உட்கார்" என்று தான் உட்கார்ந்திருந்த நாற்காலியைச் சுட்டிக்காட்டினுள்.

மீனுள் மெதுவாகத் தடுமாற்றமான நடையாய் அந்த ஆசனத்தை நோக்கிச்சென்ருள். அந்த ஆசனம் பூர்விகத்திலிருந்த யாரோ ஒரு சிற்பியால் ஒரு கல்லால் நாற்காலி போற் செய்யப்பட்டிருந்தது.

புனிதம் தன் தந்தையோடு நெருங்கிச்சென்று தூரத்திலிருந்த ஒரு பலகை யாசனத்தில் அவள் பக்கத்திலேயே யுட்கார்ந்து கொண்டாள். அவள் பீதியோடும், இரக்கத்தோடும், ஆவலோடும் தன் தமக்கையின் முகத்தை நோக்கியபடி யிருந்தாள். அச்சமயம் நற்குணமும் நல்லெண்ணமும் தன் தமக்கையின் மேலன்பும் உடைய அக்கன்னிகையின் மனக்கலக்கம் இத்தகையதென ஒருவராலும் கூறமுடியாது. மீனுளோ தன்கதி யெப்படியாயினும் சரியென்ற துணிவோடு நாகம்மாள் என்ன செய்தாலும் செய்யட்டுமென்று பேசாமலிருந்தாள்.

புனிதவதி மீனுளை யுற்றுநோக்கியபடி யிருந்தாள். மீனுள் நாகம்மாள் உட்கார்ந்திருந்த கல் நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருக்கிருள். அவளுடைய கன்னங்களும் உதடுகளும் சுண்ணும்பு போல் வெளுத்திருக்கின்றன. புனிதம் பிறகு நாகம்மாளை நோக்கலானுள். நாகம்மாள் அச்சமயம் தன் வாயில் என்னமோ மொண மொண வென்று கூறிக்கொண்டே ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்குச் சென்றுகொண்டு பலவிதமான வஸ்துக்களைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டுபோய் மேஜை மேல் வைத்துக்கொண் டிருந்தாள். புனிதம் கடைசியில் தன் தமக்கையின் நிலைமையை நோக்க இப்போது நடக்கும்

விவகாரங்களால் அவளுடைய மன நிலைமைக்கு என்ன சம்பவிக்குமோவென்று தனக்கிருக்கும் பீதியைப்போல் தன் தந்தைக்கும் இருக்கிறதா அல்லது அவர் அதைப் பற்றி என்ன கருதுகிறார் என்பதை யறிய வெண்ணித் தன் தந்தையை நோக்கத் தொடங்கினாள். ஆனால் தைரியநாதம் பிள்ளையின் முகத்தால் அவர் மனதில் அத்தகைய பீதியுண் டாயிருப்பதாகத் தெரியவில்லை. அவர் நிதானமாய் நாகம் மாளின் செய்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். நமக் குச் சினேகனும், நம்மிடம் அன்புடையவனும் ஒருவைத்தி யனுமாகிய ஒருவன் நோயாளிக்குச் சிகிச்சை செய்யப் பல வித முயற்சிகளைச் செய்யும்போது அதனால் என்ன பய னுண்டாகுமோ, அதன் முடிவு என்னவாகுமோ என்று எப்படி ஆவலோடு பார்த்துக்கொண் டிருப்போமோ அவ் வாறே தைரியநாதம் பிள்ளை தம் சுற்றத்தாளுடைய நட வடிக்கைகளைக் கவனித்துக்கொண் டிருந்தார்.

---

## 42-வது அத்தியாயம்.

இதற்கிடையில் நாகம்மாள் தன் காரியங்களைச் சரி வரச் செய்துமுடித்தாள். அங்கிருந்த கல்மேஜை யின்மேல் பலவிதமான கருவிகளைக் கொண்டுபோய் வைத் தாள். அவற்றில் ஒரு தட்டில் அடுப்புக்கரி நிறப்பி வைக்கப் பட்டிருந்தது. அதன்பக்கத்தில் ஒரு ஈயத்தகுடும் ஒருவிதக் குறடும் வைக்கப்பட்டன. அதன்பிறகு நாகம்மாள் கெட்டி யாகப் பேசத்தொடங்கி,

“நீங்கள் இங்குவருவது எனக்கு முன்னடியே தெரிந் திருந்தது மிக்க நற்காலமாயிற்று. நீங்கள் அதைப்பற்றித் தீர்மானிக்க நெடு நேரத்திற்கு முன்பே எனக்கு நீங்கள் வரப்போவது தெரியும். இன்றேல் இப்போது செய்யப்

போகும் காரியத்திற்கு அவசியமான கருவிகளை நான் எப்படித் தயாரித்து வைத்திருக்க முடியும். இவைகளோ ஏக காலத்தில் கிடைக்கக்கூடிய பண்டங்களல்ல. யாவும் அவரவர் கால பலன்படிக்கே யமையும்" என்று கூறிவிட்டு, மீனாவை நோக்கி "குழந்தாய்! உனக்கு நோய் உன் தேகத்தில் எந்த விடத்தில் இருக்கிறது?" என்று கேட்டாள்.

மீனாள் தன் மார்பின் இடதுபக்கத்தைத் தொட்டுக் காட்டினாள்.

நாகம்மாள் "சரிதான் சரிதான்—அதுதான் வருத்தத்திற்கும் துயரத்திற்குமிடம். இது உத்தேசமாய்க் கூறப்படும் வீண் வார்த்தையென்று அவள் தந்தையும் தங்கையுமான நீங்கள் எண்ணிவிடவேண்டாம். நீ அசௌக்கியமாகவிருக்கிறாயென்று நான் கூறுவதாயின், அதனாலுனக்குண்டாகும் கஷ்டம் குறைந்து விடுமாறு நான் செய்யக்கூடியதாயிருக்கும். வேறெவ்வித உதவியாலும் அது பூரணமாகச் சுகப்படாது ஆகா! இருதயம்! இருதயம்! அதைத்தொடு. உடனே கண்கள் மயங்கிவிடுகின்றன- நாடிகள் தடுமாறிவிடுகின்றன. இரத்தவோட்டம் தடைப்பட்டு விடுகிறது. நமது அவயவங்கள் நீர்வற்றிய மரக்கிளைகள் போல் வாடிவிடுகின்றன. நமது நல்ல நோக்கங்களெல்லாம் இறந்தகால சங்கதியாய்ப் போய்விடும். இனியிருப்பது கழிந்த சுகத்தின் கனவுபோன்ற நினைவு அல்லது, தடுக்க முடியாத துன்பம்வருமே யென்ற பீதியுமே. ஆனால் நான் செய்யவேண்டிய வேலையைச் செய்ய வேண்டியதே. அதையே நான் இப்போது செய்துகொண் டிருக்கிறேன்." என்றாள்.

அதன்பிறகு நாகம்மாள் தான் அணிந்திருந்த மேல் சட்டையைக் கழற்றிவிட்டு, உள்ளே யணிந்திருந்த குட்டையான சட்டையோடு நின்றாள். அதன்பிறகு தன் கூந்தலை

யவிழ்த்து உதறிவிட்டாள். அக்கூந்தல் தன் முகத்தையும் தோள்களையும் மறைத்துக்கொள்ளுமாறு அதனை விட்டு விட்டாள். அதன்பிறகு அவள் வட்டமான ஒரு வஸ்துவை நாம் முன் கூறிய கரி நிரப்பப்பட்ட தட்டின்மேல் வைத்து ஒருசிறு புட்டியிலிருந்த திராவகத்தில் சில துளிகளை அக் கரியின்மேல் ஊற்றினாள். அதன்பிறகு இன்னொரு சிறு புட்டியிலிருந்த திரவ பதார்த்தத்தில் விரலைத் தோய்த்து அந்த விரலால் அந்தக்கரியிலிருக்கும் தட்டைச் சுட்டிக் காட்டி "ஓ! அக்னி பகவானே! நீ யுன் காரியத்தைச்செய்" என்றாள்.

அவள் அவ்வாறு கூறியதே வட்டமான வஸ்துவின் கீழிருந்த கரி திக்கென்றுபற்றி யெரியத்தொடங்கியது. அது முதலில் மெதுவாய் எரியத்தொடங்கியது. ஆனால் நாகம்மாள் அக்கினிப்பொறி வீசுவதுபோன்ற தன் பார் வையை யதன்மேல் நாட்டியதே அது குபீலென்று பற்றி யெரியத்தொடங்கியது. அதன்பிறகு நாகம்மாள் சுமார் இரண்டு மூன்று நிமிடங்கள் ஏதோ ஒரு மந்திரத்தை உச் சரித்துவிட்டு அதன்பிறகு தான் மேஜைமேல் வைத்த ஈயத்தகட்டிலிருந்து ஒரு துண்டைக் கத்தரியால் வெட்டி எரியும் தீயின்மேலுள்ள தட்டில் எறிந்தாள். அந்த ஈயம் உருகிக்கொண்டிருக்கையில் நாகம்மாள் மறுபடி யொரு மந்திரத்தை உச்சரித்தாள். அதன்பிறகு அங்கு ஜாடியி லிருந்த ஜலத்தில் கொஞ்சத்தை ஒரு தட்டில் ஊற்றி அந்த உருகிய ஈயத்தை அச்சலத்தில் ஊற்றினாள். மறுபடி ஏதோ மந்திரத்தைச் சபித்துக்கொண்டே தன் மாத்திரைக் கோலால் அந்த ஈயம் ஊற்றப்பட்ட ஜலத்தைச் சற்று நேரம் கிளறிக்கொண்டே யிருந்தாள்.

அவ்வாறு ஈயத்தை யுருக்கிச் சலத்தில் விட்டுக் கிளறி னால் அந்த ஈயம் ஆறும்போது பலவிதமான உருவங்களை

யுடைய துண்டுகளாக ஆகிவிடுவது சுபாவம். அந்தத் தீவார் அதையொரு விசேஷ குறியறியும் சங்கதியாகக் கருதுவதுண்டு. அவ்வாறே அதே காரியத்தை மந்திர வல்லமையோடு செய்யும் நமது நாகம்மாளும் அந்த ஈயத் துண்டுகளை யெடுத்து அவற்றின் உருவங்களை மிக்க அக்கரையோடு சோதிக்கத் தொங்கினாள். அவற்றில் தான் எதிர்பார்த்தபடி தக்க உருவம் அமையவில்லை போலும்.

ஆகையால் நாகம்மாள் சற்று கோபமடைந்து தன் தேவதைகளின்மேல் அக்கோபத்தைக் காட்டியதோடு, மறுபடி அந்த ஈயத் தகட்டிலிருந்து இன்னொரு துண்டை வெட்டி நெருப்பின்மேலிருக்கும் பாத்திரத்தில் போட்டு மறுபடி யொரு மந்திரத்தை யுச்சரித்தாள். அந்த ஈயம் உருகத் தொடங்கியது.

நாகம்மாள் அந்த விடத்தை விட்டு அறையின் ஒரு மூலைக்குச்சென்று அங்கிருந்த சாளரத்தைத் திறந்தாள். அச்சமயம் சூரியன் அச்சாளரத்தின் திக்கில் இருந்ததால் உடனே அறைக்குள் சூரியக்கிரணங்கள் குபீலென்று பிரவேசித்தன. நாகம்மாள் அங்கு நின்று வானத்தைப் பார்த்தபடி ஏதோ மந்திரத்தை யுச்சரிக்கத் தொடங்கினாள். சற்று நேரம் உச்சரித்தபின் தன் கூந்தலிலிருந்த சில உரோமங்களைப் பிய்த்து மந்திரம் ஜபித்துக்கொண்டே காற்றில் தூற்றினாள். அதன்பிறகு சாளரத்தை மூடிவிட்டாள். அதற்குள் தட்டில் இருந்த ஈயம் உருகியது. முன் போல் நாகம்மாள் அதையெடுத்து ஜலத்தில் ஊற்றிக் கிளறியபின் அதில் இருந்த துண்டுகளை யெடுத்து ஜாக்கிரத்தையாய் ஒவ்வொன்றின் உருவத்தையும் கவனிக்கத் தொடங்கினாள். தான் கருதிய உருவம் கிடைத்ததுபோல் அவள் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாகியது. அவள் அந்த ஈயத் துண்டுகளில் இருந்த பலவித உருவங்

களில் கொட்டைப் பாக்களவு இருந்த ஒன்றை யெடுத்தாள். அது இருதயத்தின் உருவம்போலிருந்தது. அவள் அதைக் கரத்தில் பற்றிக்கொண்டு மீனளருகிற்சென்று, தன் குறிசொல்லும் பாஷையில் சில வார்த்தைகளைக் கூறினள்.

மீனள் தன் துக்க சமாசாரத்தைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருந்தாள் இப்போது நாகம்மாள் கூறுவதைக் கேட்டதே திடுக்கிட்டு அவள் கூறுவதால் ஏதோ விசேஷ சங்கதி யறியலாமென்று ஆவலோடு அவளை யுற்று நோக்கினள். இதற்கிடையில் நாகம்மாள் இருதயம் போன்ற அந்த ஈயத்துண்டில் ஒரு துவாரம் செய்து அதில் ஒரு பொன் கம்பியைக் கோத்து அதைக் கழுத்தில் எதோடேனும் சேர்த்துக் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளுமாறு செய்தாள். அதன்பிறகு ஒரு மந்திரத்தைக் கூறினள்.

மீனள் அதற்கு விடையாக "ஓ என் தாயே! உன் வார்த்தைகளையும் பார்வையையும் குறிகளையும் நான் கவனிக்கிறேன். நீ மறைபொருளாகக் கூறினுலும் நான் அதன் பொருளை யறிந்துகொள்ளுமாறு ஆண்டவன் அருள் புரிவார்" என்ருள்.

அவள் மொழிகளைக்கேட்ட தைரியநாதம் பிள்ளை "ஆ! கடவுளையும் இஷ்டதெய்வங்களையும் பெரியோர்களையும் வாழ்த்தக் கடமைப்பட் டிருக்கிறேன். மீனள் அனேக நாட்களாக இப்போதுதான் பயன்தரத்தக்க வார்த்தைகளைக் கூறியதை நான் என் காதாரக்கேட்டேன்" என்ருர். நாகம்மாள் அவர் இடையில் பிரவேசித்ததால் கோபமடைந்து "நீ என் மந்திர வல்லமைக்கு இம்மாதிரி இடையூறு செய்தால் இன்னும் சிலமாதங்கள் வரையில் இவள் பேசுவது இவையே கடைசி வார்த்தைகளாக விருக்கும். உங்கள் முகங்களைச் சுவரின் பக்கமாய்த் திருப்பிக்கொள்

ளுங்கள். மறுபடி இப்பக்கம் திரும்பினீர்களோ என் கொடிய கோபத்திற்கு ஆளாவீர்கள். ஓ! தைரியநாதம் பிள்ளை ! நீ கல்மனதான அளவுகடந்த துணிகரம் காட்டு கிறாய். புனிதம்! நீயோ அற்ப புத்தியில் எதிலும் அவநம்பக முடையவளாயிருக்கிறாய். உங்கள் இருவர் புத்திக்கும் இந்த விஷயங்கள் விளங்கவில்லை. ஆகையால் நீங்கள் இந்த மர்ம மான விஷயங்களைப் பார்க்கத் தகுதியுடையவர்களல்ல. உங் கள் அவநம்பகமான பார்வையில் மந்திரத்தின் வலிமை குறைந்துவிடும். ஏனெனில் அம்மந்திர அதிஷ்டான தெய் வங்கள் அவநம்பிக்கையைப் பொறுக்கமாட்டா" என் றாள்.

தைரியநாதம்பிள்ளை அத்தகைய கண்டிப்பான வார்த் தைகளுக்கு ஒருபோதும் உட்பட்டவரல்ல. ஆகையால் உடனே ஏதேனும் கோபமான விடையே யளித்துவிட் டிருப்பார். ஆனால் தன் புத்திரியாகிய மீனாள் மனோவியாதி யால் மிக்க தேக பலஹீனமடைந்திருக்கிறாள் என்பதையும், நாகம்மாள் மிக்க துயரத்தை யனுபவித்துக்கொண் டிருக் கிறாளென்பதையும் சிந்தித்து தம் கோபத்தை யடக்கிக் கொண்டு தம் தலையைத்தாழ்த்தி, தோட்களை யசைத்து, மேஜையின் பக்கமிருந்து தன்தலையைத் திருப்பிக்கொண்டு சுவரின் பக்கம் திரும்பிக்கொண்டார். அவர் ஒருவிதமான சமிக்கை செய்ததே புனிதவதியும் சுவரின் பக்கம் திரும் பிக்கொண்டு பேசாமலிருந்தாள்.

நாகம்மாள் மறுபடி மீனாளைநோக்கிப் பின் வருமாறு மொழிந்தாள்:—

"நான் கூறும் மொழிகளைக் குறிப்பாய்க் கேட்பாய்
முகமும் கன்னமும் நாணத்தாலே
சிவக்கச்செய்யும் மொழிகளினுண்மை
அற்பமாமிந்த ஈய இருதயம்

இழந்த பொக்கிஷக் குறியேயாகும்
சாந்தமும் நம்பகம் தனையுமேயளிக்க
அணிந்தே யிதனை யமைதியோ டிருப்பாய்
நின் நலியும் துயரும் நீங்கும்காணே
சிவந்த அடிகள் சிவந்த கரங்களை
ஆற்றீவில் அணைந்திடும் போதே"

இம்மொழிகளைக் கேட்டதே மீனுள், நாகம்மாள் தன் துயரத்தின் இரகசியம் முழுமையும் அறிந்துகொண் டிருக்கிருள் என்று உணர்ந்தாள். இதே காரணத்தால் நாகம்மாளால் தன் துன்பங்கள் நீங்குமென்று கருதினுள். தன் உணர்ச்சியை வேறு வெளிப்படையான விதமாகக் கூற அவளால் முடியவில்லை. ஆகையால் நாகம்மாளின் இருகரங்களையும் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு முதலில் தன் மார்பிலும் பிறகு தன் இருதயத்தின் மேலும் வைத்து அழுத்திக்கொண்டு அந்தக்கரங்களைக் கண்ணீரால் நனைத்தாள்.

நாகம்மாள் இதுகாறும் தான் வழக்கமாகக் காட்டாத அன்போடு மீனுளின் பிடியினின்றும் தன் கரங்களை விடுவித்துக்கொண்டு, மிக்க மன உருக்கத்தோடு அந்த ஈய இருதயத்தை மீனுளின் கழுத்தில் கட்டினுள். கட்டிக்கொண்டே ஒரு மந்திரத்தை உச்சரித்தாள்.

நாகம்மாள் தன் மந்திரத்தை யுச்சரித்தபின் தான் மீனுள் கழுத்தில் கட்டிய இரட்சையை வெளியில் தெரியாதபடி ஜாக்கிரதையாய் மறைவாகத் தள்ளி அமைத்து விட்டாள். இத்தகைய நம்பிக்கை அத்தீவில் சகசமாயிருந்தது. எவ்வாறெனில் அத்தீவிலிருப்பவர்களில் யாருக்கேனும் சாதாரண வைத்தியரால் நீக்கமுடியாததா யிருந்தால் பேய் அவர்களுடைய இருதயத்தைக் களவாடிக் கொண்டு போய் விட்டதென்று கருதி, இம்மாதிரி ஒரு இருதயத்தைப் பொன் சங்கிலியில்மாட்டிக் குளிசமாகக் கட்டி விட்டால்

செளக்கிய மடைவார்கள் என்று நம்புவார்கள். ஆகையால் இத்தகைய விவரங்கள் அத்தீவில் எப்போதும் நடப்பது சகஜமே.

நாகம்மாள் மறுபடி மீனுளை நோக்கி "நீ இதை யாருக்கேனும் வெளியில் காட்டினுல் அல்லது இதைப்பற்றி பிரஸ்தாபித்தால் இதன் மகிமை குறைந்துபோம்" என்ருள். அத்தகைய நம்பகம் அத்திவாரிடம் சாதாரணமாகவேயுண்டு. நாகம்மாள் கடைசியில் மீனுளின் சட்டைப் பொத்தான்களைக் கழற்றி, தான் அவள் கழுத்தில் முன் பணிந்த இரட்சையை யெடுத்து அதிலிருந்த பொற் சங்கிலியின் ஒரு பாகத்தைக் காட்டினுள். அதைக்கண்டதே மீனுள் அது முன்பு நாகம்மாள் முருகப்பனுக் களித்த தென்று தெரிந்துகொண்டாள். அதனுல் முருகப்பன் நாகம்மாளின் ஆதரணையிலிருக்கிருன் என்று உணர்ந்துகொண்டாள். ஆகையால் மிக்க ஆவலோடு நாகம்மாளின் முகத்தை நோக்கினுள். அச்சமயம் மீனுளின் மனேநிலைமை இத்தகையதாக விருந்ததெனக் கூற முடியாது. நாகம்மாள் மீனுளை நோக்கித் தன் மூக்கின்மேல் விரலைவைத்துக் காட்டிப் பேசாமலிருவென்று சமிக்கைசெய்து, அந்தக் குளிசத்தையும் சங்கிலியையும் மீனுளின் மார்பின்மேலிருந்த சீலையில் மறைத்துவிட்டாள். அதன்பிறகு அங்கு மேஜைமேல் எரிந்து கொண்டிருந்த தீயில் நீர்தெளித்து அதையணைத்து விட்டுத் தைரியநாதம் பிள்ளையையும் புனிதத்தையும் நோக்கி என்காரியம் முடிந்து விட்டது பாருங்கள் என்று கூறுகிறவள்போல் சமிக்கையாய்ப் பார்த்தாள்.

மீனுளின் தேகத்திலிருந்த அசெளக்கியத்தை யொழித்ததால் நாகம்மாள் தைரியநாதம் பிள்ளையின் நன்றியறிதலுக்கு உரியவளாகி விட்டாள் என்று தோன்றியது. நாகம்மாள் மறுபடி அறையிலிருந்த சாளரத்தைத் திறந்துவிட்

டாள். மீனுள் தன் கண்களிலிருந்த நீரைத் துடைத்துக் கொண்டு அன்பு நிறைந்த நம்பிக்கையோடு தன் தந்தை யின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவரை யாலிங்கனம் செய்துகொண்டாள். தைரியநாதம் பிள்ளை தன் மகள் இப் போதுதான் மரணத்திலிருந்து காப்பாற்றித் தன்னிட மளிக்கப்பட்டதுபோல பன்முறை யவளை யன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

மீனுள் தன் தந்தையைவிட்டுப் பிரிந்தபின், தன் தங்கை யருகிற்சென்று அவளை யாலிங்கனம் செய்துகொண்ட பின் இருவரும் சந்தோஷத்தோடு ஒருவரையொருவர் பன் முறை தழுவிக்கொண்டார்கள். தன் தமக்கையின் சௌக் கிய மடைந்த நிலைமையைக் கண்டதே புனிதவதி உள்ளத் தில் சந்தோஷமடைந்தாள்.

தன் புத்திரிக்கு இவ்வாறு சுகத்தை யுண்டாக்கிய தன் சுற்றத்தாளுக்குத் தன் நன்றியறிதலை யறிவிக்கவேண்டு மென்று கருதி தைரியநாதம் பிள்ளை அவளருகிற்சென்றுர். அவர் "மரியாதைக்குரிய என் சுற்றத்தாளே! நான் ஒரு சாதாரணமான வடநாட்டு மனிதன்..." என்று கூறுவதற் குள், நாகம்மாள் தன் உதட்டின்மேல் விரலைவைத்து, "இங்கு உன் கண்ணுக்குப் புலப்படாத ஆசாமிகளிருக்கி ருர்கள். அவர்கள் உன் போன்ற சாதாரண மனிதரின் சத் தத்தைக் கேட்கலாகாது. ஒவ்வொரு சமயத்தில் அவர்கள் எனக்கும் விரோதமாய்க் கிளம்பிவிடக்கூடும். ஏனெனில் நான் இன்னம் உங்களைப்போல் மாமிசத்தாலாகிய தேக முடையவளாகவே யிருக்கிறேன். ஆகையால் பீதியோடு பேசாமலிரு. நான் இந்த உலக வாழ்க்கையிலிருந்து அடி யோடு மாறுபட்டிருப்பதால், உலகில் சாதாரண மனிதர் இச்சிக்கும் அற்ப போகங்களை யெல்லாம் வெறுத்திருப்ப தால் நான்மட்டுமே அவர்களோடு சமமாய்ச் சகவாசம்

செய்யலாகும். ஆயினும் நீ பயப்படவேண்டாம். அப்படிக் கூறியதாலேயே உன் துணிகரத்தை யளவு கடந்து காட்டி விடாதே. இந்த இரவு நீ பக்தி செய்துகொண்டு உபவாசம் இரு'' என்றாள்.

ஆரம்பத்திலேயே தைரியநாதருக்கு நாகம்மாளை யெதிர்த்துப் பேசக்கூடவில்லை, விருப்பமுமில்லை யெனின், இப்போது தன் புத்திரியைப் பற்றிய விஷயம் அனுகூலமாக நிறைவேறிற்றென்று தோன்றும்போது எங்கேனும் எதிர்த்துப் பேசுவாரோ. ஆகையால் அவர் அங்கிருந்த ஒரு புத்தகத்தை யெடுத்துக்கொண்டு ஒரு நாற்காலியிலுட்கார்ந்து அதை வாசிக்கத் திறந்தார். அந்தோ! அது அன்னிய பாஷையில் இருந்தது. வடநாட்டாருடைய இலௌகிக ஆசாரங்களையும் வழக்கங்களையும்பற்றி அப்புத்தகம் கூறுகிறது. தைரியநாதர் அதை வாயால் வாசிக்க முடியாவிட்டாலும் கண்ணால் வாசித்துக் களிக்கலாம். எப்படியெனில் எல்லாவிஷயங்களும் அழகிய படங்களால் விளக்கிக் காட்டப்பட்டிருந்தன. தைரியநாதர் அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கத் தொடங்கினர்.

நாகம்மாள் ஒரு நாற்காலியிலுட்கார்ந்து, அவர்கள் வரும்போது தான் கரத்தில் வைத்துக்கொண்டிருந்த புத்தகத்தை மறுபடி கையிலெடுத்து வைத்துக்கொண்டு கன்னிகைகளிருவரையும் நோக்கிக்கொண்டிருந்தாள். நாகம்மாள் இப்போது அப்பெண்களைப் பார்க்கும் பார்வையில் குளிர்ந்த அன்பு நிறைந்திருந்தது. அது அவளுடைய இயற்கைக் குணத்திற்கு முற்றும் மாறானதாகவே யிருந்தது. புனிதவதி மிக்க வியப்போடும் அச்சத்தோடும் நாகம்மாளை நோக்கியபடியிருந்தாள். தன் தமக்கையின் விஷயத்தில் நடந்த சம்பவத்தைப்பற்றி அவளுக்குச் சந்

A-5

தோஷமே. ஆயினும் "நாம் வந்ததுமுதல் இதுகாறும் நிம்மதியாகவே சம்பவங்கள் நிகழ்ந்தன. இனியும் நாம் இதைவிட்டுப் புறப்படும் வரையில் இப்படியே நடக்குமா" என்று சிந்திக்கலானுள். மறுவினுடி அவர்கள் நிம்மதி கலைந்து விட்டது.

ஏனெனில் நாகம்மாளின் ஆளாகிய சம்பு என்ற செவிட்டூமை ஆத்திரத்தோடு அறைக்குள் வந்தான். நாகம்மாள் கோபத்தோடு அவனை நோக்கினுள். உடனே அவன் தலைவணங்கி தன் விரல்களால் என்னென்னவோ பலவித மான சமிக்கைகளைக் காட்டினுன். நாகம்மாளும் தன் விரல்களால் சில குறிகள் காட்டினுள். இவ்வாறு இருவரும் இரண்டொரு விநாடிகள் சம்பாஷித்தார்கள். தைரிய நாதரும் மீனுள் புனிதம் இருவரும் அத்தகைய விஷயத்தை யொருபோதும் கண்டதேயில்லை. ஆகையால் அவர்கள் அது பெரும்பாலும் ஒருவித மாந்திரீகமே யென்று கருதினுர்கள். அவர்கள் சம்பாஷணை முடிந்ததும் நாகம்மாள் தைரியநாதரை நோக்கி மிக்க கோபத்தோடு,

"ஏன் அய்யா! நீர் எப்படி என் வீட்டிற்குள் உணவுப் பொருள்களைக் கொண்டுவரும்படியான தைரியமடைந்தீர்? ஆகாரம் கொண்டுவந்து, மனமுடைந்து துக்கம் கொண்டாடும் வீட்டில் கேளிக்கையாக ஆகாரங்களைத் தயார்செய்யும்படி செய்தீர். பேசவேண்டாம். இப்போது நான் செய்திருக்கும் மந்திரத்தின் வல்லமை நீ எவ்வளவு வரை பேசாமல் சொல்லுகிறபடி நடந்துகொள்ளுகிருயோ அதைப்பொறுத்தது. நீ என்னிடம் ஒரு வார்த்தையேனும் எதிர்த்துப் பேசினுயோ அதோடு உன் குமாரத்தியின் நிலைமை முன் இருந்ததைவிட மிக்க கெடுதியாக முடியும்" என்ருள்.

தைரியநாதர் தமது செய்கையைப்பற்றி ஏதோ சமா

தானம் கூறக் கருதினாரேனும் நாகம்மாள் கூறிய வார்த்தைகள் அவரை வாய்திறவாதபடி செய்துவிட்டன. நாகம்மாள் அவர்களை நோக்கி "நீங்களெல்லாம் என் பின்னால் வாருங்கள். ஒருவரும் பின்னால் திரும்பிப் பார்க்கலாகாது. ஏனெனில் இப்போது நாம் இந்த அறையைக் காலி செய்து விட்டுச் செல்வதில்லை. ஸ்தூலதேகத்தோடு கூடிய நாம் மட்டுமே அறையை விட்டுச் செல்கிறோம். நான் கூறுவது தெரிகிறதா?" என்றாள்.

அவ்வாறு கூறிக்கொண்டே நாகம்மாள் எழுந்து அந்த அறையைவிட்டுக் கிளம்பினாள். தைரியநாதம் பிள்ளை நாம் அவள் கட்டளைப்படி நடக்கவேண்டுமென்று தம் பெண்களுக்குச் சமிக்கைசெய்து என் கூட வாருங்கள் என்று நாகம்மாளைப் பின் தொடர்ந்தார். நாகம்மாள் அவர்களைவிடத் துரிதமாய் நடந்து அவர்களுக்கு முன்பு கரடுமுரடான அப் படிகளின் வழியாய் இறங்கிச் சென்றாள். அப் படிகள் அவர்களைக் கீழே யிருக்கும் அறைக்குக் கொண்டுபோய் விட்டது. தைரியநாதரும் அவர் புத்திரிகளும் அங்கு சேர்ந்ததும், தங்கள் சொந்த வேலையாட்கள், நாகம்மாளையும் அவள் செய்கைகளையும் கண்டு திப்பிரமையடைந்து நின்றிருக்கக் கண்டார்கள்.

---

## 43-வது அத்தியாயம்

தைரியநாதரும் அவர் புத்திரிகளும் அந்தக் கீழறைக்கு வருமுன் அவர்களுடைய வேலைக்காரர்கள், தங்கள் எஜமான் ஆகாரம் கேட்கும்போது தயாராய் ஆகாரம் ஆயத்தம் செய்து வைப்பதற்காகத் தாங்கள் கொண்டுவந்த உணவுப் பொருள்களை யெல்லாம் ஒழுங்குபடுத்திக்கொண் டிருந்தார்கள். அச்சமயத்தில்

நாகம்மாளும் தைரியநாதம் பிள்ளை முதலியவர்களும் அங்கு வந்ததைக் கண்டதே அவ்வேலையாட்கள் திடுக்கிட்டு நின்றார்கள். அவர்கள் வந்ததும் நாகம்மாளும் அவள் வேலைக்காரனாகிய சம்புவும் வேலைக்கார் ஆயத்தம் செய்து வைத்திருந்த பண்டங்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சுவரில் இருந்த துவாரத்தின் வழியாய்ப் பக்கத்தில் பாதாளத்திலிருக்கும் அலைகள் வீசும் கடலில் எறிந்தார்கள். பாபம் அவர்கள் கொண்டுவந்த பதனிட்டப் பலவகை யிறைச்சிகள், அப்பங்கள், பதனிட்ட பழவகைகள், புகையூட்டிய வாத்துகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாய் ஆகாயத்தில் பறந்தன. தைரியநாதம் பிள்ளை என்ன நடக்கிறதென்று நிதானித்துப் பார்ப்பதற்குள் பாபம் அவர் தமக்கென்று மிக்க பத்திரத்தோடு கொண்டுவந்த தோற்பையிலிருந்த பிராந்தி புட்டியும் மற்ற பண்டங்கள் சென்ற வழியே சென்றது. பாபம் அப்பொருள்கள் சென்ற அவசரத்தில் தைரியநாதர் தம் வெள்ளிக் கிண்ணத்தைக்கூட காப்பாற்ற முடியவில்லை. அதில் தான் அவர் சாராயம் முதலிய எந்தப் பானமும் அருந்துவது. அதை யெடுத்தெறிந்த சம்பு என்பவன் அவரைப் பார்த்த மாதிரியைநோக்க ஒருவித வஞ்சம் தீர்த்துக்கொண்ட சந்தோஷத்தால் பார்ப்பவன் போலிருந்தது. அதாவது தைரியநாதம் பிள்ளை தமது பொருள்கள் அழிவதைக் கண்டு படும் மனவருத்தத்திற்காக அவன் சந்தோஷமடைவதுபோ லிருந்தது.

தைரியநாதம் பிள்ளை யாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாலும், தமது சாராயப் புட்டியும் வெள்ளிச் கிண்ணமும் இம்மாதிரி வீணாக, மூடத்தனமாகக் கடலில் எறியப் பட்டதைக் கண்டதே தமது பொறுமையை யடக்கமுடியாதவராகி நாகம்மாளை நோக்கி, "ஓகோ! இதென்ன வீண் பைத்தியக்காரத்தனமான செய்கையால் உண்டாக்கும்

ஷ்டமல்லவா! நாங்கள் எப்படி எவ்வகைப் பாத்திரத்தில் போஜனம் செய்வோம் என்று கருதுகிறாய். இது உபயோகப்படும் பொருள்களை வீணே நாமே யிழப்பதுதானே!" என்றார்.

நாகம்மாள் "நீ எங்கு எப்படி போஜனம் செய்வதா? எதில் சாப்பிடுவதா? என் வீட்டிலல்ல, என் வீட்டை யசுத்தப் படுத்திய அந்த உணவையல்ல, என் ஆன்மாவிற்கு இன்னும் வருத்தத்தை யுண்டாக்க வேண்டாம். நீங்கள் ஒவ்வொருவரும் இதைப்விட்டுப் போங்கள். உங்களுக்கும் எனக்கும் நன்மை யுண்டாகாதவாறு நீங்கள் முன்னமே நெடுநேரம் இங்கேயிருந்து விட்டீர்கள்" என்றாள்.

தைரியநாதர்:—"என்ன அம்மா! எங்களை இந்த இரவிலா அநாதைகள்போல் வெளியில் செல்லச் சொல்கிறாய்? ஒரு மலைநாட்டான் கூட இப்படிக் குரூரமான காரியத்தைச் செய்யமாட்டானே. அவன்கூட இந்த இரவில் தன்வீட்டிற்குவந்த அதிதிகளை வெளியில் துரத்த மாட்டானே. இப்போது எங்களிடம் ஒரு உணவுப் பொருளுமில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் எங்களை வெளியில் போகச்சொல்வது உனக்கு மிக்க அகௌரவம் என்பதை நீ யுணரவில்லைபோலும்" என்றார்.

நாகம்மாள் "ஒன்றும் பேசாமல் இதைவிட்டுச் செல். நீ வந்த காரியம் கைகூடியது என்பதைப்பற்றித் திருப்தியடைவதோடு செல். நம்போல் தூல தேகமுடைய ஆட்களுக்கு இங்கு வசிக்க வசதியில்லை. அவர்கள் பசியை யடக்கத்தக்க உணவும் பொருள்களும் இங்கில்லை. இக்குன்றின் அடியில் நேர்த்தியான மணலையுடைய கடற்கரையும், ருசியுடைய தெளிவான சலம் நிறைந்த ஊற்றும், இருக்கின்றன. காட்சியோ கண்களைக் கவரக்கூடியது. அந்த இடம் சகல வியாதிகளையும் குணப்படுத்தும்" என்றாள்.

தைரியநாதம் பிள்ளையின் மனம் அச்சமயம் எத்தகைய வேதனையடையும் என்பதை யிதை வாசிப்போரே யூகித்துக் கொள்ளவேண்டும். ஆயினும் அவர் முதலில் கொஞ்சம் ஆத்திரத்தோடு நாகம்மாளை நோக்கி, "சரி என்னை நிராகரித்துவிட்ட வீட்டில் பொற்கிண்ணத்தில் விலை யுயர்ந்த உணவுப் பொருள்களையும் பஞ்சகச்ய பரமான்னத்தையும் புசிப்பதைவிட வேறிடத்தில் உடைந்த மட்பாண்டத்தில் புளித்த காடிக் கூழை யருந்துவேன்" என்று கூறி யவர் மறுபடி சமாளித்துக்கொண்டு "ஆ! நாகம்மாள்! நான் செய்தது தவறு, பெரியதவறு, உன்னிடம் அவ்வாறு நான் பேசலாகாது. நான் நீ செய்த நன்மை யொன்றைக் கருதி யுனக்கு நன்றி பாராட்ட வேண்டுமே யொழிய நீ யுன்சுய குணப்படி நடந்துகொள்வதற்காக உன்மேல் கோபிக்கலாகாது. நீ மிக்க ஆத்திரத்தோ டிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் நாங்களெல்லாரும் இதோ துரிதமாகவே யிங்கிருந்து வெளிச்செல்கிறோம்" என்று கூறிவிட்டுத் தமது ஆட்களை நோக்கி "ஓ மூடர்களே! நான் கட்டளையிடுமுன் ஆத்திரப்பட்டு வேலைசெய்த முட்டாள்களே! உடனே இந்த விடத்தைவிட்டுச் சீக்கிரம் புறப்படுங்கள், வேறிடத்திற்குப் போய்ச் சேரவேண்டும். சீக்கிரம் புறப்படாவிட்டால் நாம் பட்டினியாய் இருக்கநேர்ந்ததோடு மிருதுவான படுக்கையின்று கடினமான கட்டாந்தரையில் சயனிக்க வேண்டியதாக நேரிடும்" என்றார்.

தைரியநாதம்பிள்ளையின் ஆட்கள் முன்னமே நாகம்மாளின் நடக்கைகளைக் கண்டு மிக்கபீதியும் மனக்கலக்கமுமடைந்திருந்தார்கள். ஆகையால் இப்போது அந்த விடத்தை விட்டுப்புறப்பட வேண்டுமென்று தங்கள் எஜமான் கூறிய கட்டளையைக் கேட்டதே அவர்கள் உடனே அங்கிருந்து புறம்பட்டு விட்டார்கள். மீனாளும் புனிதமும்

தங்கள் தந்தையின் புயங்களைப் பற்றிக்கொண்டு பின்னால் நடக்கத் தொடங்கினார்கள்.

அச்சமயம் நாகம்மாள் "நில்லுங்கள் சற்று" என்று கூவினாள். உடனே மூவரும் திடுக்கிட்டு நின்றார்கள். நாகம்மாள் தைரிய நாதரை நோக்கி "சுற்றத்தாரே! நாம் இப்போது விதியில்லாத அவசிய காரணத்தால் பிரிந்து விடுகிறோம். நீ இது கோபத்தாலாவது வெறுப்பினாலாவது நேரிட்டதென்று எண்ணலாகாது" என்று கூறிக்கொண்டே அவர் கரத்தைப்பற்றிக் கொண்டாள்.

தைரியநாதம் பிள்ளை சற்று தடுமாற்றத்தோடு "நாகம்மா! நான் ஒரு காலும் அப்படிக் கருதவே மாட்டேன். நான் சாதாரணமாக யார் மேலுமே விரோதம் அல்லது கோபம் கொள்வதில்லை. அப்படியிருக்க என் இரத்தக் கலப்பான சுற்றத்தாள் விஷயத்தில் எங்கேனும் அப்படிக் கருதுவேனோ? ஒருகாலுமில்லை. அதிலும் அனேக கஷ்டமான சந்தர்ப்பங்களில் மாலுமிக்குத் திசையறி கருவியும் சுங்கானும் உதவுவதுபோல் எனக்கு அரிய ஆலோசனைகளைக் கூறிய உன் விஷயத்தில் அப்படி நினைப்பேனோ" என்றார்.

அதன்பிறகு நாகம்மாள் "சரி, போதும் போதும். இன்னும் ஒரு வார்த்தைகூடக் கூறவேண்டாம். நான் அளிக்கக்கூடிய பூரண ஆசீர்வாதத்தோடு போய் வாருங்கள்" என்று மொழிந்துவிட்டு அக்கன்னிகைகளை நோக்கி "குழந்தைகாள்! இப்படி வாருங்கள்" என்றாள்.

மீனாளும் புனிதவதியும் அவளருகிற் சென்றதும் அவள் இருவர்க்கும் மிக்க அன்போடு முத்தமளித்தாள். அதன் பிறகு அவர்கள் அங்கிருந்து இறங்கி வெளியிலுள்ள பாலத்தைக்கடந்து சற்று நேரத்திற்குள் அக்குன்றின் அடியில் போய்ச் சேர்ந்தார்கள். இரவு சௌக்கியமாய்த் தங்கியிருப்

போம் என்று நம்பிய இடத்தை அத்தகைய இரவில் விட்டு வந்த அவர்கள் சில நிமிடங்கள் அங்கு திகைத்து நின்றிருந்தார்கள்.

மீனாள் தன் வரையில் தன் சிந்தனைகளில் மனதைச் செலுத்தியிருந்தாள். நடந்த சம்பவங்களால் அவள் ஒருவாறு திருப்தியடைந்தாலும் நாகம்மாள் கூறியவற்றின் கருத்தென்னவென்று சரியாக அறிய முடியாமல் சிந்தித்துக்கொண்டிருந்தாள். தைரியநாதம் பிள்ளையோ தமக்கு நேர்ந்த அவமரியாதைக்காக தாம் கடிந்துகொள்ள முடியாமலிருப்பதைப் பற்றி எவ்விதமாகச் சிந்திக்கவும் முடியாமல் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தார். அவர் எப்போதும் அத்தகைய விதமாக ஒருவராலும் நடத்தப்பட்டதில்லை. உண்மையில் அவர் மனதில் உண்டான கோபம் இன்னும் அடங்கவில்லை. ஒரு பக்கம் பார்த்தால் நாகம்மாளால் தன் புத்திரிக்கு நன்மையுண்டாகி யிருக்கிறது. அதோடு அவள் செய்கைகளை யவளுடைய மாறுபட்ட இயற்கைக் குணத்தாலுண்டானவை யென்று கருதவேண்டியிருக்கிறதே யன்றி வேறு கெட்ட குணத்தாலென்று கருதுவதற்கில்லை. வேலைக்காரர்களைப் போய் குதிரைகளைப் பிடித்து வரும்படி யனுப்பிவிட்டு மூவரும் பிரமையடைந்தவர்கள்போல் அங்கு நின்றார்கள்.

இரண்டு மூன்று நிமிடங்கள் ஒருவரும் பேசாமல் அவரவர்கள் சிந்தனையிலிருந்தார்கள். கடைசியில் புனிதம் தன் தந்தையை நோக்கி "இப்போது நாம் என்ன செய்வது? இரவை யெங்கு கழிப்பது?" என்றாள். அவ்வார்த்தைகளைக் கேட்டதே தைரியநாதம் பிள்ளைக்கு நகைப்புண்டாகிவிட்டது. அவர் கெட்டியாய்க் கலகலவென்று நகைக்கத் தொடங்கினர். அவர்கள் நிற்குமிடத்திற்கு நேராய்ப் பாறையின்மேல் நாகம்மாளின் அறையிருக்

கிறது. ஒரு சமயம் நாகம்மாள் தன் தந்தை நகைப்பதைக் கேட்டால் தன்னையே கேலி செய்கிறார் என்று எண்ணிக் கொள்ளலாகும் என மீனாள் பீதியடைந்து தன் தந்தையின் தோளைப்பற்றி இழுத்துச்சென்று அவரைத் தூரத்தில் விட்டாள்.

தைரியநாதர் தமது நகைப்பை யடக்கமுடியாமல் விலா வெடித்துவிடும்போல் தமது முழுபலத்தையும் கொண்டு சிரிக்கத்தொடங்கினார். அவர் கண்களில் நீர் பெருகுகிறது. அவ்வாறு அவர் என்றுமில்லாதபடி அளவு கடந்து சிரிப்பதைக் கண்ட பெண்கள் இருவரும் தங்கள் தந்தைக்குப் புத்தி சபலித்து விட்டதோ வென்று பீதியடைந்தார்கள். ஆனால் தைரியநாதர் தம்மால் ஆன வரையில் சிரித்துக் களைப்படைந்து அங்கிருந்த ஒரு குத்துக்கல்லின்மேல் உட்கார்ந்து "அடடா நாம் இங்கு எவ்வளவோ நம்பகத்தோடு, இரவிற்கு இங்கேயே போசனம் செய்து விட்டுச் சயனித்துக் கொள்ளலாமென்றிருந்ததற்கு இம்மாதிரி நடு இரவில் வெளியில் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டால் இதை யொரு பெரிய கேலியாகக் கருதாமல் வேறென்ன வென்று நினைப்பது. அதனாற்றான் என் பக்கங்கள் வெடிக்குமட்டும் இதுவரையில் சிறித்தேன். இவ்விரவு நிம்மதியாய் நித்திரை செய்வோம், நல்ல ஆகாரமருந்துவோம் என்று நம்பிக்கையோடிருந்தோம். இப்போது திப்பிரமையடைந்து வழிக்கிறேன். இச்சமயத்தில் நமது புனிதவதி "நாம் என்ன செய்வது? இரவை எங்கு கழிப்பது என்ற கேள்விகளைக் கேட்ட" என் மனம் பதைத்து விட்டது. இந்த வேலைக்காரப் பயல்கள் நான் கட்டளையிடுமுன் வேலைசெய்து நாகம்மாளுக்கு வீணாகக் கோபத்தை யுண்டாக்கிவிட்டார்கள். இப்போது இவர்களில் ஒருவன்றான் இரவு நாம் தங்குவதற்கு வேறு ஏதே

னும் ஒரு இடம் கண்டுபிடிக்கவேண்டும். உங்களிருவர்க் காகவே நான் கலவரப்படுகிறேன். என் வரையில்எனக்கு ஒரு கவலையுமில்லை. நான் எத்தனையோ பிரயாணங்களில் இம்மாதிரி ஆகாரக் குறைவால் கஷ்டப்பட்டுச் சமா ளித்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு மட்டும் கொஞ்சம் ஆகாரம் கிடைத்தால் நான் எதைப்பற்றியும் குறைகூறமாட்டேன்'' என்றார்.

பெண்கள் இருவரும் "அப்பா! எங்களைப் பற்றிக் கவலையே வேண்டாம். எங்களுக்கு இப்போது பசியே யில்லை'' என்றார்கள்.

**தைரியநாதர்**:—"ஓ! அப்படியிருப்பது உண்மையாயின் என் பசியைப்பற்றி (அது அதிகமாகவே யிருந்தாலும்) நான் பிரஸ்தாபிக்கவே மாட்டேன். அந்தத் திருட்டுப் பயல் சம்பு நாம் அங்கிருந்து துரத்தப்பட்டபோது என்னைப் பார்த்த பார்வையிருக்கிறதே, அடடா! என் சுற்றத்தாளுக்கு மனவருத்தமுண்டாகு மென்று கருதியிரா விட்டால் அந்த விடத்திலேயே அவனை யொரு களிமொத்தைபோலாக்கி விட்டிருப்பேன்'' என்றார்.

இதற்குள் குதிரைகளைத் தேடிக்கொண்டு போனவர் கள் அவைகளைப் பிடித்துக்கொண்டு திரும்பி வந்தார்கள். பாபம் அக்குதிரைகளுக்கு அந்தக் கற்பூமியில் சரியான ஆகாரம் அகப்படவில்லை. ஆகையால் இவர்கள் மறுபடி கடிவாளம் மாட்ட அவற்றைப்பற்றியபோது அவை மிக்க அதிருப்தியோடேயே இவர்கள் கூட வந்தன. ஆனால் இதில் ஒரு சந்தோஷமான விசேஷம் இருந்தது. அதா வது இவர்கள் அங்கு சேர்ந்ததும் அக்குதிரைகளின் மேலிருந்த சாமான்களை யிறக்கியபோது ஒரு குதிரையின் மேலிருந்த மூட்டையை யிறக்காமல், கலவரத்தில் விட்டு

விட்டார்கள். தெய்வசங்கல்பமாய் அம்மூட்டையில் உணவுப் பொருள்களே யிருந்தன. இச்சங்கதியை யறிந்ததே அவர்களுக்கு மிக்க சந்தோஷ முண்டாயிற்று.

குதிரைகளைத் தேடிக்கொண்டு சென்ற வேலைக்காரரில் சூக்குமபுத்தியும் சுறு சுறுப்பும் உடைய ஒருவன் கடலோரமுள்ள பாதையில் சுமார் மூன்றுமைல் தூரத்தில் பாதைக்குக் கால்மைல் தூரத்தில் ஒரு குடிசையிருப்பதைக் கண்டு அங்கு இரவிற்குத் தங்கலாமென்று எண்ணிக்கொண்டு வந்து அதைத் தன் எஜமானிடம் கூறினான். அது ஒரு வலைஞன் குடிசையாகவாவது காலிக் குடிசையாகவாவது இருக்குமென்று கருதப்பட்டது. அங்கு அவர்கள் தங்கினால் அவர்களும் இரவு நிம்மாதியாக இளைப்பாறலாம், குதிரைகளும் இளைப்பாறும் என்று கருதினார்கள்.

தன் புத்திரிகளுக்கு ஆகாரம் கிடைத்ததையும், தங்களுக்கு இரவு தங்க இடம் கிடைத்ததையும் அறிந்ததே தைரியநாதம் பிள்ளைக்கு மிக்க சந்தோஷமுண்டாய் விட்டது. அதனால் அவர் ஆனந்தமாய்ப் பாட்டுப்பாடத் தொடங்கினார். அந்த உற்சாகத்தால் மீனாளும் புனிதமும் கூடப் பாடத்தொடங்கினார்கள். இவர்கள் சந்தோஷமாகப் பாடிக்கொண்டே சென்றார்கள். வசந்தமாளிகையில் கேளிக்கை நடந்ததினம் முதல் மீனாள் மனதில் சந்தோஷம் என்பது அடியோடு நசித்துவிட்டது. அவள் மனம் துயர்க்கடலில் ஆழ்ந்திருந்தது. ஆனால் இப்போது நடந்த சம்பவங்களால் அவள் மனதில் உற்சாகமுண்டாயிற்று. ஆகையால் அவர்கள் சற்றுநேரத்திற்கு முன்பிருந்த நிலைமைக்கு மாறாக இப்போது சந்தோஷமாய்ப் பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள்.

இவர்கள் எதிர்பார்த்த விடத்திற்குச் சமீபத்தில்

சென்றதே, தைரியநாதம் பிள்ளை தமது ஆளை நோக்கி "நீ கூறிய குடிசை யெங்கே யிருக்கிறது?" என்று கேட்டார். வேலையாள் சற்றுநேரம் நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்து "ஆ! அதோ தெரிகிறதே அந்தக் குடிசைதான். அடடா அதுவாக விருப்பின் அதில் யாரோ வாசம் செய்கிருர்க ளென்று தெரிகிறது. அதோ அதில் தீபவொளி யிருக் கிறது" என்ருன். "அப்படியாயின் அங்கிருப்பவர்கள் நல்ல மனிதராக விருக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த் திக்கிறேன்" என்ருன்.

உண்மையில் அக்குடிசையில் உள்ளே தீபம் இருந்த தால் அதன் பிரகாசம் அக்குடிசையிலிருந்த பல சந்து களின் வழியாக வெளியில் வீசியது. அந்தவிடம் ஒரு கொல்லனுடைய உலைக்கூடம் இரவில் எப்படி தோன்றுமோ அப்படி தோன்றியது. அத்தீவிலுள்ளவர்களுக்கு இத் தகைய விஷயங்களில் ஒரு விதமான மூடபீதியுண்டு. அதா வது, இராக்காலங்களில் பேய்களும், பூதங்களும், அன் னிய உலக வாசிகளும் அத்தகைய பாழடைந்த காலிக்குடி சைகளில் வந்து தங்கி யிருப்பதுண்டென்றும் அச்சமயங் களில் தெரியாமல் யாரேனும் அவர்களெதிரில் போய் விட்டால் மிக்க ஆபத்துக் குள்ளாவார்களென்றும் அத் தீவார்க்கு ஒரு மூட நம்பிக்கையுண்டு. தைரியநாதரும் மற்றவர்களும் இப்போது அத்தகைய பீதியடைந்தார்கள். ஒருவர் "அங்கு பேய்கள் இருக்கின்றன" என்றுகூற இன் னெருவர் "அங்கு ஆவேசங்கள் இருக்கின்றன" என்ருர். இன்னெருவர் "அல்ல அல்ல; அவைகள் கடல் தேவ தைகள். அதோ அவர்களின் சங்கீதத்தைப் பாருங்கள்" என்ருர்.

அச்சமயம் அக்குடிசையி லிருந்து சங்கீதத்தொனி கேட்டது.

சங்கீதத்தைக் கேட்டதே யாவரும் தட்டென்று நின்று உற்றுக் கேட்டார்கள். சற்றுநேரம் கேட்டதும் புனிதவதி "அது பிடீலின்நாதம்" என்றாள்.

முதலில் யாவர்க்குமுண்டாகியது போல் தைரியநாதம் பிள்ளைக்கும் பீதியே யுண்டாயினும் மறு விநாடி தமது சுபாவகுணமாகிய தைரியத்தை யடைந்து "பேயாக விருந்தாலும் சரி பிசாசா யிருந்தாலும் சரி, தேவதைகளாக விருந்தாலும் சரி, அது பிடீலாக விருந்தாலும் இருக்கட்டும், வீணையாக விருந்தாலு மிருக்கட்டும், இந்த இரவு இரண்டாம்முறை என் குழந்தைகள் ஆகாரம் புசிப்பதற்கு இடையூறுண்டாக நான் பார்த்துக்கொண்டு ஒருபோது மிரேன்." என்று கூறிக்கொண்டே, தமது குதிரையை விட்டிறங்கித் தமது நம்பிக்கையான கைக்கோலை கரத்தில் பற்றிக்கொண்டு தம் நம்பிக்கையான வேலைக்காரனை மட்டு மழைத்துக்கொண்டு அக்குடிசையை நோக்கி நடந்தார். மற்ற ஆட்கள் குதிரைகளுக்கும் பெண்களுக்கும் காவலாகப் பாதையிலேயே நின்றார்கள்.

---

## 44—வது அத்தியாயம்.

தைரியநாதம் பிள்ளை அக்குடிசையை நோக்கிச் செல்லும்போது அவர் சற்றேனும் தடுமாற்ற மடையவில்லை. அவர் கால் நடையின் உறுதி குறையவுமில்லை. அவர் மனேதிடம் கலங்கவுமில்லை. அருகிற் போகப்போக சங்கீதத்தில் தொனி மிக்க தெளிவாகக் கேட்டது. ஆனல் ஒரு சுத்த வீரன் எதிரிகள் இருக்குமிடத்தருகில் தைரியத்தோடு தன் சேனையை நடத்திச் சென்றாலும், எதிரிகளின் நிலைமையை யறியுமுன் மிக்க எச்சரிக்கையோடு செல்வதுபோலவே, தைரியநாதம்

பிள்ளை சந்தடி செய்யாமல் மெதுவாகவே நடந்து அக் குடிசையை நோக்கிச் சென்றார்.

தைரியநாதம் பிள்ளையோடுகூடச் சென்ற வேலைக்காரன், தன் எஜமானை நோக்கி "எஜமானே! அங்கு சங்கீதம் நடப்பது பேயின் அல்லது ஆவேசத்தின் சங்கீதமாயிருந்தால் நமது பைரவி கிருஷ்ணப்பனுடைய ஆவேசமாகவே யிருக்கவேண்டும். ஏனெனில் அப்பாட்டை யிம்மாதிரி பாடுகிறவர்கள் இவ்வுலகில் வேறு யாருமில்லையென்று உறுதியாகக் கூறுவேன்" என்றான்.

தைரியநாதம் பிள்ளையும் அவ்வாறே கருதினர். அவருக்கு கிருஷ்ணப்பன் குரல் நன்றாகத்தெயியும். அவர் துரிதமாகக் குடிசை யருகிற்சென்று அவனைப் பெயரிட்டழைத்தார். உடனே பதில் ஒரு சத்தம் கேட்டதும் கிருஷ்ணப்பனே வெளியில் வந்து நின்றான். தைரியநாதர் உடனே தன் புத்திரிகள் முதலிய அனைவரையும் வாருங்கள் வாருங்கள் என்றழைத்தார். பிறகு தன் நண்பனாகிய பைரவி கிருஷ்ணப்பனை நோக்கி, "ஓ! நண்பனே! நீ யேது ஜனசஞ்சார மற்ற இத் தனிக் குடிசையில் வந்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கிறாய். நீ யெப்போது இங்குவந்தாய்? ஏன்வந்தாய்?" என்று நகைத்துக்கொண்டே கேட்டார்.

**கிருஷ்ணப்பன்:**—என்னைப்பற்றி யிருக்கட்டும். நீ எப்படி இக்குடிசையி னருகில் இந்தவேளையில் வரநேர்ந்தது? ஆ! ஹோ! உன் புத்திகள்கூட. ஓ அழகிய மீனா! புனிதம்! இக்குடிசைக்கு நீங்களும் வந்ததேது? உங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். உங்கள் அழகு இரவைப் பகலாக்கிவிட்டது. இங்கு எப்படி வந்தீர்கள்!

**தைரியநாதர்:**—" அதைப்பற்றிச் சாவதானமாய்க் கூறுகிறேன். தற்சமயம் இக்குடிசையில் உன்கூட யாரிருக்கிறார்கள் என்பதைத் தெரிவி. உன் சத்தம் தவிர

வேறு குரல்களும் கேட்டதாகத் தோன்றுகிறது'' என்றார்.

கிருஷ்ணப்பன்:—அன்னியர் ஒருவருமில்லை. நமது வயோதிக எல்லப்பனும் என்னிடமிருக்கும் சிறுவனுமேயிருக்கிறார்கள். நாங்கள் சுகமே வயிறு நிறைந்த பசியோடு இரவைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். இங்கு அன்பிற்கேனும் பணத்திற்கேனும் ஒரு உலர்ந்த சோறுகூட கிடைக்கவில்லை. உலகில் எல்லா விஷயத்திலும் அனுபவம் சுய அனுபவம் இருப்பதே நலம். அந்த விதியின்படி பசி யெப்படியிருக்கிற தென்பதையும் அனுபவமா யறியவேண்டியதே.

தைரியநாதர்:—“அக்குறையைப் பூரணமாக நிவர்த்திக்க முடியாதேனும் சற்று ஏறக்குறையவேனும் நீக்கிக் கொள்ளலாகும். ஏனெனில் எங்களிடமிருந்த நேர்த்திய ஆகார வகைகளில் முதல்தரமானவை யெல்லாம் கடலிலிருக்கும் பிராணிகளுக்கு இரையாக எறியப்படினும் மிச்சம் கொஞ்சம் இருக்கவே இருக்கிறது'' என்று கூறி ஆகார மூட்டையை யெடுத்துக்கொண்டு வரும்படி வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்.

அதற்குள் தைரியநாதம் பிள்ளையும் அவர் புத்திரிகளும் குடிசைக்குள் சென்று உட்கார்ந்தார்கள். வேலைக்காரன் சந்தோஷத்தோடு குதிரைமேலிருக்கும் ஆகார மூட்டையை யெடுத்துவரச் சென்றான். கிருஷ்ணப்பன் சந்தோஷத்தோடு தைரியநாதரை நோக்கி “நண்பரே! உமது மாளிகையில் வருகிற எவர்களும் தங்கள் வயிற்றைப் பூரணமாய் உயர்ந்த ஆகாராதிகளால் நிரப்பிக் கொள்ளாமல் அதைவிட்டுச் சென்றதேயில்லை. இனியும் செல்லப்போவதுமில்லை. பாலைவனத்திலும் நீர் நினைத்தபோது ஆகார மூட்டைகள் அந்தரத்திலிருந்து இறங்கும்போல் தோன்றுகிறது'' என்றான்.

தைரியநாதர்:-“இந்த விஷயத்தில் நீ நினைப்பதுதான் தவறு. இச்சந்தர்ப்பத்தில் அந்தர தேவதை யெனக்கு ஆகார மளிப்பதற்குப் பதிலாக என்னிடமிருந்த—நான்

18658

என் வீட்டிலிருந்து சேகரம் செய்து கொண்டுவந்த சேர்த்தியான ஆகார வகைகளை யெல்லாம் ஒரு பேயைக்கொண்டு கடலில் எறியச்செய்தது. தெய்வ கதியாய்க் கொஞ்சம் தப்பிநின்றது அதைச் சந்தோஷமாய் நீங்களும் பகிர்ந்துகொள்ளலாகும்" என்றார்.

இவர்கள் அக்குடிசைக்குள் செல்லும்போது விவசாயியாகிய எல்லப்பன் ஒரு மூலையில் இருந்த நெகிடித்தீயில் குளிர்காய்ந்துகொண் டிருந்தான். அக்குடிசையின் மற்றொருபுறம் வடநாட்டுச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் கிருஷ்ணப்பனுடைய சங்கீதக் கருவியைச் சுமந்து செல்வது, அவருடைய குதிரையைத் தேய்ப்பது, இன்னும் வேண்டிய சிறு காரியங்களைச் செய்வது ஆகிய வேலைகளைச் செய்பவன். அக்குடிசையில் உலர்ந்த மச்சத்தின் துர்மணம் வீசிக்கொண்டிருந்தது. எல்லப்பன் இவர்களைக் கண்டதே சற்றும் மனக்கிளர்ச்சி யடையவில்லை. இவர்களோடு வார்த்தையாடவுமில்லை. அவன் சகிக்கொணாத் துயரத்தில் அமிழ்ந்திக் கிடப்பவன்போல காணப்பட்டான்.

ஆனால் இரண்டொரு நிமிடங்களில் தைரியநாதம் பிள்ளையின் வேலைக்காரரன் ஆகார மூட்டை கொண்டு வந்து வைத்து அதிலிருந்த தின்பண்டங்களையும் சாராய புட்டியையும் வெளியில் எடுத்து வைத்ததைக் கண்டதும் அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசமுண்டாயிற்று. அவன் உடனே வந்தவர்களுக்கு நல்வரவு கூறி வசந்தமாளிகையைச் சேர்ந்த ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரித்தான், சற்றுநேரத்திற்குள் யாவரும் போஜனம் அருந்தினார்கள். அதன்பின் தைரியநாதர் எல்லப்பனை நோக்கி "ஏனையா நீ எப்படி இங்கு வந்திருக்க நேர்ந்தது? நீ ஏதோ துயரத்தால் முகவாட்ட மடைந்திருப்பது போல் காண்கிறதே, என்ன சங்கதி?" என்று வினவினார்.

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவாராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணுபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசாலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

**விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.